பாரதமணி



சர்வஜித்து ௵

பங்குனி ௴

BUARATA MANI

K. S. VENKATARAMANI

4 அணா

அழகுப் பொக்கிஷம்

அழகு தானே கலை! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை.

மைசூர் சந்தன சோப்

கவர்ன்மெண்ட்
சோப் பாக்டரி
பெங்களூர்



மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
34, அலர்மேல்மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை, 4.

வருட சந்தா ரூபா 3

தனிப் பிரதி அணா 4

மாலை 19 || சர்வஜித்து௵ பங்குனி௴ : **MARCH 1948** || முத்து 3

பொருளடக்கம்

விஷயம்		பக்கம்
புரொபசர் - வாசுதேவாச்சாரியார்—கா. சி. வேங்கடரமணி	...	85
வேலி பயிரை அழித்தால் ?—வே. நாராயணன்	...	87
கொய்த கூந்தல்—பெ. நா. அப்புஸ்வாமி	...	89
நமது நாட்டின் பழைய ஸ்வராஜ்யம்—'தராசு'	...	92
வேதத்தின் கடிதம்—'த்விஜன்'	...	96
பிச்சைக்காரன்—'கிரன்'	...	100
திட்டமான விவசாயம்—பி. கோதண்டராமன்	...	107
திவ்வியப் பிபந்தம்—வே. நாராயணன்	...	110
யாருக்குக் கவலை ?—கு. நாராயணஸ்வாமி	...	114
மரகதத்தின் துயரம்—திவான்பகதூர் - ராமஸ்வாமி சாஸ்திரி	...	116
விமர்சனம்	...	119

[முகப்புப் படம் : புரொபசர் எஸ். வாசுதேவாச்சாரியார்]

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

ஒரு விஷயம்!

நாம் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறோம். ஆனால், அறிவைப் போற்றும் வழியில் செலவிடுவது அவசியம் அல்லவா ?

ஆம்—'பாரத மணி'க்கு ஒரு வருஷ சந்தாவைக் கட்டிவிடுங்கள். அதிகமில்லை, மூன்றே ரூபாய்தான்.

உங்கள் { அறிவு விருந்து / பொழுது போக்கு } சாதனம்

பிரபல எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்
பல ரக விஷயங்கள் வாசக நேயர்களுக்கு வழங்கப்படுகின்றன
விளம்பரங்களுக்கு அரிய சாதனம்

சந்தா விவரம் :—				
	ஒரு வருஷத்துக்கு	3	0	0
	தனிப் பிரதி விலை	0	4	0

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை

பாரத மணி காரியாலயம்,
34, அலர்மேல்மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை.



டிமிர் பாரன்
ஸ்வரப் பாடகர்
கியாதி பெற்ற பாடகரும் இந்திய சங்கீதத்துக்கு புது ஸ்வரங்கள் ஏற்படுத்தி இந்திய வாத்தியங்களின் வாசிப்பையே புதுப்பித்தவருமான டிமிர் பாரன் சொல்லுவதாவது:
ஊக்கத்திற்கு

வரவேற்கிறோம்!

விவசாய அனுபவத்தை ஒட்டி எழுதப்பெறும் கட்டுரைகள் தேவை. ஏதாவதொரு கிராமத்தில் ஒரு முக்கியமான கைத்தொழில் நடந்து வந்து அது இப்பொழுது நல்ல ஸ்திதியிலோ, க்ஷீணமான நிலையிலோ இருந்தால் அத்தகைய விவரம் குறித்த கட்டுரைகள் அங்கிகரிக்கப்படும். பொதுமக்களின் குறைகளையும், அதிகாரவர்க்கம் செய்யத்தவறிய கடமைகளையும் குறித்துச் சுருக்கமாக எழுதியனுப்பினால் நமது, "தபால் பெட்டி" என்கிற தலைப்பில் பிரசுரமாகும்.

BOOKS

BY

K. S. VENKATARAMANI

	Rs.	As.
(Just Published) My Ashram Plan for Rural uplift	...1	8
Kandan, The Patriot (A Novel of New India in the Making) Second Edition	3	0
On the Sand-Dunes (Musings of Life in free Verse) Second Edition	1	0
The Indian Village (A Ten year Plan) Second Edition	0	12

SVETARANYA ASHRAMA

MYLAPORE :: :: MADRAS

புரொபஸர்
எஸ். வாசுதேவாச்சாரியார்

கா. சி. வேங்கடரமணி

உலகில் ரத்தினங்களும் மாணிக்கங்களும் மண்ணில் புதைந்து கிடப்பது போல், நமது நாட்டு உண்மையான உத்தமர்களைப் பத்திரிகைகளின் தலையங்கங்களில் பொட்டிட்டு மையிட்டு ஆடம்பரம் செய்து அரசியல் வீரர்கள் போல் காண முடியாது. நகரங்களில் அவர்கள் வாழ்ந்தாலும் ஓசையிலும் ஓட்டத்திலும் ஈடுபடாமல் அமைதியாய், தாமிருக்குமிடம் தெரியாமல் இருந்து கொண்டு தாங்கள் தொட்ட கர்மாவையும் சுதர்மத்தையும் பரிபாலனம் செய்து வருவார்கள். அவர்களை நாம் மூலிகைகளைப் போல் தேடிப்பிடிக்க வேண்டும். அரசியல் தலைவர்களைப் போல விளம்பரத்தைக் கொண்டு அவர்களைக் கண்டுபிடிக்க முடியாது.

இப்படிப் புதைந்து கிடக்கும் ரத்தினங்களில் ஒன்று புரொபஸர் எஸ். வாஸுதேவாச்சாரியர். வயலுக்கு ஓடிப் பாயும் நீர் மண்ணை வாரித்தூற்றும் பேய்க் காற்றுப் போல் சப்தப் படுத்துமா? வயலுக்கு ஓடிப்பாயும் நீர்போல் தான் இந்த உத்தமர்களின் தொண்டும். காலடி தெரியாத சேவை. என் அபிப்பிராயத்தில் இப்படிப்பட்ட உத்தமர்களின் சிகரமாய் விளங்குகிறவர் புரபொஸர் வாசுதேவாச்சாரியர். கனிந்த பழம், உயர்ந்த ரஸிகர், நப்புக் கொட்டும் சுவை, சாந்த நிலை, எப்பொழுதும் யோகத்தில் ஈடுபட்ட மனோபாவம். இப்பிறப்பு ஒரு கர்ம யோகியின் வாழ்வு என்பதற்குச் சந்தேகமில்லை. தேசியக் கல்விக்குக் கண் கொட்டாத, இடைவிடாத அறுபது வருஷத்துப் பணி. வாழையடி வாழைபோல் வருஷாவருஷம் இளைஞர்களை ஊட்டி வளர்ப்பதிலேயே ஊக்கம்.

* * *

சுமார் முப்பது வருஷத்திற்கு முன், வேங்கடம் முதல் ராமேசுவரம் வரையில் உள்ள க்ஷேத்திரங்களுக்கும் தீர்த்தங்களுக்கும் தரிசனத்திற்கும் தீர்த்தாடனத்திற்கும் போயிருந்தேன். அதை முடித்துக்கொண்டு திரும்பியதும் பெருமையுடன் என் நெருங்கிய பந்து ஒருவரிடம், “எல்லா முக்கிய க்ஷேத்திரங்களுக்கும் போய் ஆனந்தத்துடன் தரிசனம் செய்து திரும்பிவிட்டேன்—ராமேசுவரத்திலிருந்து திருப்பதி வரையில். வேங்கடாசலபதி சமாராதனை தான் பாக்கி” என்று சொன்னேன். அவர் உடனே கேட்டார் :—மன்னார்குடிக்கு சமீபத்தில் உள்ள மகா க்ஷேத்திரத்திற்குப் போனீர்களா? - என்று. “அது என்ன க்ஷேத்திரம்?” என்றேன். “உங்களுக்குத் தெரியாதா? நாகை க்ஷேத்திரம்தான்” என்றார் அவர்.

அப்பொழுது பிரபலமாய்க் கீர்த்தி பெற்ற ‘ஜப்தா கோஷ்டி’யின் தலைவர் வசிக்குமிடம் நாகை. இவர் அந்த ஜப்தா கோஷ்டியைச் சேர்ந்தவர். நமக்குக் காசி எப்படியோ அப்படி ஜப்தா கோஷ்டியினருக்கு நாகை. அவர் மனஸையும் திருப்தி பண்ண உடனே நாகைக்குப் புறப்பட்டுப் போனேன். முப்பது வருஷமாகியும் அந்தக் கிராமத்

தின் அழகும் சாந்நித்தியமும் இன்னமும் என் மனதை விட்டு அகலவில்லை. அவ்விடத்தில் பிறந்து உண்மைத் தபஸ் செய்பவருக்கு ஈசன் அருள் புரிவார் என்பதற்கு ஐயமில்லை. புரபொஸர் வாசுதேவாச்சாரியார் பிறந்த ஊர் மன்னார்குடி சமீபமுள்ள நாகைதான். இந்த அருளை இயல்பிலேயே பிதுரார்ஜிதமாகப் பெற்று உண்மையான தபஸை வாழ்நாள் முழுவதும் சென்னையில் சுய நலம் பாராட்டாத தூய்மையான தொண்டால் செய்து வருகிறார்.

1870-ல் பிறந்தவர் வாஸுதேவாச்சாரியார். மாயவரத்தில் நான் படித்த முனிசிபல் ஹைஸ்கூலில் கொஞ்ச காலம் உபாத்தியாயராக இருந்து விட்டுப் பிறகு சென்னை இராயப்பேட்டையில் ‘வெஸ்லி மிஷன் ஹைஸ்கூலில்’ ஹெட்மாஸ்டராகவும், காலேஜில் ஆங்கில பாஷைக்குப் புரொபஸராகவும் முப்பத்தாறு வருஷம் பரிசுத்தமான தொண்டாற்றினர். ராமகிருஷ்ண மிஷன் சம்பந்தப்பட்ட கல்விஸ்தாபனங்களில் இடைவிடாமல் முப்பது வருஷமாய் உழைத்து வருகிறார். ஒழிவேது ? இவர் உழைப்புக்குச் சாட்சி சென்னைத் தியாகராய நகரில் வளர்ந்து வானளாவி நிற்கும் ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூலே. இதற்கு எவ்வளவு விடாமுயற்சியும் நம்பிக்கையும் வேண்டுமென்பது நீங்களே அறிந்து கொள்ளலாம்.

பார்வைக்கு மாத்திரமல்ல, உண்மையிலேயே புரொபசர் வாசுதேவாச்சாரியார் ஒரு ரிஷி. உத்தமமான கர்ம யோகி. அவரிடம் சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசமில்லை. சொல்லை உடனே செயலாக்க வேண்டுமென்ற ஆவேசம் பிடித்த மனோபாவம். ஸம்ஸ்கிருதத்தில் சம்பூர்ணமான ஞானம் - தேர்ச்சி. நமது ஆசார அனுஷ்டானங்களிலும் வழிகளிலும் கொஞ்சங்கூட நழுவாத பக்தியோடு தினசரி வாழ்க்கையில் அதையே கைவிடாத அனுஷ்டானம். கணக்கு வழக்குகளில் தீரர். மாணவர்களைக் காயிதாவுடன் கொண்டு வருவதில் சமர்த்தர். விநய சம்பத்துக் குடி கொண்டவர். விளம்பரத்திலே ஈடுபடாத மனது. ஓர் உத்தமருக்கு இவைகளை விட அறிகுறியான உன்னத லட்சணங்கள் உண்டோ ? இவர் நீடூழி வாழ ஈசன் அருள் புரிவாராக.



வேலி பயிரை அழித்தால்?

வே. நாராயணன்

ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழிலுள் அளித்தல் மட்டுமே அரசுத் தொழிலாகும். ஆக்கல் வேலையனைத்தும் நாட்டிலுள்ள மக்களுக்கே விட்டு விடவேண்டும். தீய பழக்க வழக்கங்களை ஒழிப்பதும் மக்களுடைய கடமையே தவிர அரசுத் தொழிலைச் சார்ந்த தன்று. இவ்வுண்மையை அரசாங்கங்கள் நன்குணர வேண்டும். நிர்மாண வேலைகளிலே அரசாங்கம் தலையிடுவதானால், மக்களுக்கு ஊக்கங் குன்றிவிடும். ஒரே மாதிரியாக அதிகார வர்க்கத்தினர் பலவகைப்பட்ட சக்திகளையும் மட்டந்தட்டுவதனால் நாட்டிற்குக் கேடுதான் விளையும். மக்களுக்குத் தத்தமது இஷ்டப்படி நிர்மாண வேலை செய்து பார்ப்பதற்கு வசதிகள் வேண்டும். ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு வகையிலே புத்தி செல்லும். அவனை அவன் போக்குப்படி விட்டு அவனுடைய நிர்மாண சக்தியை வளருவதற்குத் தடை செய்யாமல் இருக்க வேண்டும். இதற்கு மாறாக எல்லோரையும் சிப்பாய்களைப் போல ஒருவிதமான கல்வியிலோ தொழிலிலோ அரசாங்கம் திட்டம் போட்டுப் பழக்குவது, தனி மக்களுக்குப் பிரும்ம தேவன் இயற்கையிலே அமைத்த விசேஷ சக்திகளை அபிவிருத்தி செய்து கொண்டதாகாது. தனி யொருவனைக் கட்டாயப் படுத்துவது போலவே, பிரத்யேகமான தொழிலைச் செய்து பழக்கத்தினாலே தேர்ந்த ஒவ்வொரு சாதியினரையும் வேறு தொழிலிலே ஈடுபடுத்த முயலுவதும் உரிய தொழிலிலே ஈடுபடுவதைத் தடுப்பதும் இதுபோலவே நாட்டிற்குக் கேடுவிளைவிப்பதாகும். உதாரணமாக, தமிழ்நாட்டிலே இப்பொழுது நடைபெறும் தொழில்களை எடுத்துக்கொள்வோம். வாணிபஞ் செய்யும் சாதியினர் பல தேசங்களுக்கும் சென்று வர்த்தகஞ் செய்தும் வட்டிக்குப் பணம் உதவியும் நாட்டைச் செழிப்பாக்கினார். அவர்களுடைய செல்வத்தைப் பார்த்து ஒரு சில சாதியினர் தங்கள் தொழிலை விட்டு வியாபாரத் தொழிலிலே இறங்கினார்கள் வியாபார அனுபவம் இல்லாமையாற் சிலர் நஷ்டமடைந்தனர். போர்க்காலத்திலே சிறிதும் அனுபவ மில்லாதவர்களும் வியாபார நாணயஞ் சிறிதுமின்றி அபாரமான இலாபங்களை விரும்பி ஏழை மக்களைக் கொள்ளையடித்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே சர்க்காரின் கடமை என்ன? பழைய வியாபாரிகளுக்குக் கிடைத்த அதிக லாபமன்றோ பிறரையும் வியாபாரஞ் செய்யும்படி தூண்டிற்று. அவர்களுக்கு வியாபாரியின் மனப்பான்மை இல்லை; கொள்ளைக்கார மனப்பான்மையே உண்டு. வியாபாரிகள் கொள்ளை லாபத்தைப் பெறுதவாறு சட்டதிட்டங்களாலே தடுத்தும் அதிக வரி போட்டும் போருக்கு வேண்டிய பணத்தை அவர்களிடமிருந்து வட்டியில்லாக் கடனாக வாங்கியும் அரசாங்கத்தார் வியாபாரத் தொழிலாளிகளின் அதி லாபத்தை மட்டுப்படுத்தி யிருந்தால், பிறசாதியினர் தம்முடைய தொழிலை விட்டு வியாபாரிகளாக விரும்ப மாட்டார்கள். வேறொரு உதாரணம் எடுத்துக் கொள்வோம். பிராம்மணருள் ஆங்கிலங் கற்ற ஒரு சிலர் அரசாங்கத்தாராலே உயர்ந்த உத்தியோகங்களில் அமர்த்தப்பட்டார்கள். கலெக்டர் ஜட்ஜ் முதலிய உயர் பதவிகளைத் தங்கள் சாதியினருக்கே உதவி வந்த மேனாட்டுச்

சர்க்கார் அவர்களுக்கு அதிகச் சம்பளங்களைக் கொடுத்தார்கள். அந்த அதிகச் சம்பளங்களையே நம் நாட்டாருக்கும் கொடுக்க வேண்டியதாயிற்று. ஆகையால் கலெக்டர்களாவதற்கும் ஜட்ஜ்கள் ஆவதற்கும் ஆங்கிலங் கற்கத் தொடங்கிய பிராம்மணர்கள் ஆசைப்பட்டனர். தங்கள் பழைய தொழில்களிலே அவர்களுக்குச் சாப்பாட்டிற்குக்கூட வழி இல்லை என்று போகவே, எல்லோரும் ஆங்கிலப் படிப்பிலே இறங்கலானார்கள். எல்லோருக்கும் கலெக்டர் ஜட்ஜ் வேலைகள் கிடைக்குமா? வக்கீல்களுள் ஒருவர் இருவரை ஜட்ஜ்களாக நியமித்ததும் சிலருக்கு அதிக வருவாய் கிடைத்ததும் எல்லோரும் வக்கீல்களாக ஆசைப்பட்டனர். பலர் சர்க்காரிலே குமாஸ்தாக்களாயினர். இவற்றிற்குக் காரணம் நாட்டு மக்களுக்குக் கல்வியாலே பெறுவதற்குரிய ஊதியத்தை விட அதிகமாக ஆங்கிலமும் சட்டமும் கற்றவர்க்குக் கிடைப்பதை சர்க்கார் தடை செய்யாமல் ஒருவர் இருவருக்கு அதிகச் சம்பளமும் அதிக ஊதியமும் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்தியதே யாகும். பிராம்மணர்கள் ஓரிருவர் உயர்ந்த பதவிகளிலிருப்பதையும் அதிக வருவாயுடையவராய்ச் செருக்குற்றிருப்பதையும் கண்ட பொது மக்கள் பிராம்மண சமூகத்தையே வெறுப்பவராயினர். குளித்து மூன்றனலை யோம்பும் அந்தணமையும் அவர்களிடத்து இல்லாது போகவே, அவர்களை வெறுப்பது தவறு என்றும் சொல்லுவதற்கில்லை. இப்படியாக நாற்சாதிகளும் ஒன்றோடொன்று பொறாமையோடும் பகைமையோடும் தற்போது வாழ்வதற்கு முக்கிய காரணம் மக்களுக்குச் செல்வத்திலும் அதிகாரத்திலுமுள்ள மோகத்தை ஆங்கில அரசாங்கத்தார் தூண்டிவிட்டுத் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டதே யாகும். இந்தப் பொறாமையும் பகைமையும் நீங்க வேண்டுமென்றால், மறுபடியும் அரசாங்கத்தார் எந்தத்தொழிலாளிக்கும் விசேஷ லாபமோ ஊதியமோ கிடையாமலும் எந்தத் தொழிலாளியும் வறுமையாலும் பிணியாலும் வாடிவருந்தாமலும் இருப்பதற்குரிய வசதிகளையும் சட்ட திட்டங்களையும் அமைப்பதுதான். இதுவே "அளித்தல்" என்னும் அரசுத் தொழிலாகும்.

ஆனால், சுதேசச் சுதந்திரச் சர்க்கார் இவ்வுண்மையை உணர்ந்தவர்களாகக் காணவில்லை. போர்க்காலத்திலே விசேஷ லாபங்களை அடைந்த வியாபாரிகளைப் பார்த்துப் பொறாமைப்பட்டு, அந்தத் தொழிலைத் தாமே செய்து, சர்க்கார் இலாப மடையத் தொடங்கிவிட்டார்கள். ரயில்களுக்குச் சர்க்கார் சொந்தக்காரர்கள் ஆனார்கள். மோட்டார் பஸ்களையும் சர்க்காரே விடத் தொடங்கி விட்டார்கள். மின்சார வசதிகளையும் அவர்களே வழங்கி லாபம் பெற முயல்கிறார்கள். பள்ளிக்கூடத்துப் பாடபுஸ்தகங்களைக் கூடத் தாங்களே எழுதிப் பதிப்பித்து லாபம் பெறப் பார்க்கிறார்கள். வியாபார மனப்பான்மை சர்க்காருக்கே வந்துவிட்டால், அப்புறம் மக்களைக் கொள்ளை வியாபாரக்காரர்களின்னின்று யார் காப்பாற்றுவது? வேலியே பயிரை அழித்தால், யாரிடம் முறையிடுவது?

கொய்த கூந்தல்

பெ. நா. அப்புஸ்வாமி

ஆல்டன் பிரபுவின் மகள் அழகில் சிறந்தவள். ஆனால் கருவம் கொண்டவள். அவள் அடிக்கடி கண்ணாடியின் முன் நின்று தன் அழகைத் தானே பாராட்டி, 'என்னைத் தேடி அரசர் முதலியோர் வருவார்கள். அவர்களை அவமதிப்பேன். அவர்களை என் அழகுக்குக் கப்பம் கட்டச் செய்வேன்' என்று முடிவு செய்தாள். ஆனால் அவள் கேட்ட கப்பம் அன்பற்றது. 'என்னை மணம் புரிபவன் ஆறு அழகிய பெண்களின் கூந்தல்களை அரிந்து, என்னிடம் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும்' என்று அவள் சொன்னாள்.

அவளை விரும்பிவந்த இளைஞர் எல்லாரும் அவளுடைய மனநிலையைக் கண்டு அவளை அருவருத்தார்கள்; நீங்கிச் சென்றார்கள். ஆயினும், அவள் தன் எண்ணத்தைக் கைவிடாமல், 'ஏதாவது ஒருநாள் யாராவது ஒரு அழகிய வாலிபன் என் எண்ணத்தை நிறைவேற்றுவான்' என்று கடற்கரையில் உலாவிக் காத்திருந்தாள்.

ஒரு நாள் அவள் கடலிலே வெள்ளி ஓடம் ஒன்று மிதந்துவரக் கண்டாள். அது மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் பொற்கூம்பிலே மகமல் பாய் கட்டியிருந்தது. அதில் ஓர் அழகிய இளைஞன் நின்றான். அவன் கரையருகே வந்து, குதித்திறங்கினான். அவளிடம் வந்தான். ஐந்து மங்கையரின் கூந்தல்களைக் கொய்து கொண்டு வந்திருப்பதாகக் காட்டினான்.

ஆனால் அவள், 'ஆறு மங்கைகளின் கூந்தலை அரிந்து கொணர்பவனையே நான் மணப்பேன்' என்று மறுபடியும் சொன்னாள். உடனே அவன், அவளுடைய கூந்தலையே கொய்து எடுத்துக்கொண்டு, அவளை அலறவிட்டுப் படகில் ஏறிப் போய் விட்டான்.

ஆல்டன் பிரபுவின் அருமை மகள்
அழகில் ஈடும் இணையும்இலாள்
பால்நிற மேனியள், சுரிகுழலாள்,
பவள இதழாள், கூர்விழியாள். 1

செல்வச் செருக்கால், பேரழகால்,
சேடியர் கூறும் புகழ்மொழியால்,
கல்விக் குறைவால், குணக்குறைவால்,
கருவம் கொண்டாள் தன் அழகில். 2

'என்போல் அழகி இவ்வுலகில்
எவரும் இல்லை; இருந்ததில்லை.
பொன்னின் ஒளியும் என்நுதலில்
புரளும் குழலுக் கொப்பாமோ?' 3

என்றே அவள்தான் பலகாலும்
எண்ணி ஆடியின் எதிர்நிற்பாள்.
நன்றே மேனி வடிவென்பாள்.
நன்றே கூந்தல் அழகென்பாள். 4

'என்உயர் அழகின் புகழ்கேட்டே
இங்கே வருவார் இளவரசர்.
"மின்னைப் போன்ற எழிலுடையாய்,
வேண்டி வந்தோம் உனை" என்பார். 5

'இரவில் விளங்கும் சுடர் ஒளியை
எண்ணில் விட்டில் மொய்ப்பனபோல்
திரளாய் வந்தெனை மன்னவர்கள்
தினமும் சூழ்ந்து நிற்பார்கள். 6

'அழகிற் சிறந்த மன்னவரும்
ஆண்மை மிக்க ஆடவரும்
'குழலின் அழகி நீ' என்றே
கூறிப் புகழ்வர் நாள்தோறும். 7

'மலையைத் தாண்டி வந்தவரும்,
மணலைக் கடந்து வந்தவரும்,
அலையும் கடலிற் கப்பலிலே
அஞ்சா தேறி வந்தவரும், 8

‘ தொலையாத் தூர தேசத்துச்
சுதந்திர மன்னர் இளவரசர்
தலைவர் வீரர் அனைவருமே
தாழ்ந்து பணிவர் என்முன்னர். 9

‘ நாவும் குழற, மெய்பதற,
நடுங்கி என்தன் முகநோக்கி,
ஆவல் கொண்டே அவர்களெலாம்,
“ அழகி மணப்பாய் எமை ” என்பார். 10

‘ அப்போ தவரில் எவரையுமே
அணுக வொட்டேன் என்அருகே,
கப்பம் வாங்கும் அரசரைநான்
கப்பம் கட்டச் செய்வேனே.’ 11

என்று கருதி இறுமாந்தே
எழிலார் வாலிபர் முகநோக்கி,
‘ இன்று கடலைக் கடந்தென்பால்
இரந்து வந்த வாலிபரே, 12

‘ என்னை மணக்க ஆசையுடன்
இங்கு வந்த கோமகரே,
என்னை நீவிர் மணந்துகொள
ஏற்ற வழியைக் கூறுவனே. 13

‘ அரச குமரிகள் அறுவர்களின்
அழகிய கூந்தல் கொய்திங்கே
பரிசில் என்று கொணர்ந்தென்னைப்
பணிந்தால் ஒருகால் பெற்றிடலாம். 14

‘ ஆதலால் இங்கே நில்லாமல்,
அணுவும் தாமதம் செய்யாமல்,
பூதலம் முழுதும் செல்லுங்கள்.
பொன்னிறக் கூந்தலைக் கொய்யுங்கள். 15

‘ நீலக் கடலின் கரையினிலே
நிதமும் திரிவேன் தேவதைபோல்.
கோலக் கூந்தல் கொய்திங்கே
கொணர்வீர் என்றே காத்திருப்பேன்’ 16

‘ வெள்ளிப் படகின் பொற்கூம்பில்
விரித்த பட்டு விளங்கிடவே
துள்ளி வீசும் கடல்கடந்து
சுரிகுழல் கொய்து வாருங்கள் !’ 17

என்றே கோமகள் கூறிடவும்,
இளைய வாலிபர் அனைவருமே
சென்றுர் வாடிய முகத்துடனே
திரும்பித் தம்தம் நாடடைந்தார். 18

‘ வண்டார் கூந்தல் அழகுடனே
வதனப் பொலிவும் வடிவழகும்
கண்டார் மனத்தைக் காந்தம்போல்
கவர்வன. நாமும் ஏமாந்தோம். 19

‘ பொன்னிற உடலின் நீலமணிப்
புள்ளிகொள் நச்சர வும்இந்தக்
கன்னியைப் போலக் கொடியதிலை.
கல்லே இவளது நெஞ்சன்றே ? ’ 20

இவ்வா றந்த இளைஞரெலாம்
எண்ணி இகழ்ந்து சென்றிடவும்,
செவ்வாய்ப் பைங்கிளி போன்றவளும்
திருந்தா மனத்துடன் இருந்தாளே. 21

நிதமும் கடலின் கரையினிலே
நிலத்தில் வாழும் தேவதைபோல்
‘மதனன் போன்ற ஓர்அழகன்
வருவான்’ என்றே காத்திருந்தாள். 22

உருகிய நீல மணிபோல
உலகைச் சூழ்கடல் தாண்டிமிக
அருகினில் வந்த ஒருபடகை
அவளும் ஒருநாள் கண்டாளே. 23

‘ ஆகா ! அந்த ஓடத்தின்
அழகை எப்படிக் கூறுவது ?
ஆகா யத்தில் மிதக்கின்ற
அம்புலி மிதக்குமோ கடல்மீது ? 24

உருக்கி வார்த்த வெள்ளியினுல்
ஓடம் முழுதும் அமைந்ததுவே.
நெருக்கிக் கோத்த மலர்மாலை
நிறமும் மணமும் அளித்தனவே. 25

‘ பத்தரை மாற்றுப் பொன்னுலே
படகின் கூம்பும் அமைந்ததுவே.
சித்திரை வேலை செய்துள்ள
சீரிய மகமல் அதன்பாய்கள். ’ 26

படகின் தளத்தில் பொற்கவசம்
பளபள என்று மின்னிடவே
இடபம் போன்ற ஓர் இளைஞன்
இளநகை தோன்ற நின்றனனே. 27

கண்டாள் மங்கை கண்குளிரக்
கரையை அணுகும் ஓடத்தைக்
கண்டாள் நின்ற வீரனையும்.
காதல் கொண்டாள் கண்டதுமே. 28

‘ வெள்ளி ஓட மீதில்வரும்
வீரன் யாரோ நான்அறியேன்.
உள்ள முழுதும் அவரிடமே
ஓடிச் சென்றதை அறிவேனே. ’ 29

மனத்தின் நிலையை முகம்காட்ட
‘ வருக ’ என்வே மகிழ்ச்சியுடன்
வனப்பின் மிக்க அம்மங்கை
வந்த வீரனை அழைத்தனளே. 30

கரையின் அருகே படகுவரக்
கட்டிச் சுருட்டினன் பாயைஅவன்.
விரைவில் குதித்தனன் மணலினிலே.
வேகமாய் வந்தனன் மங்கையிடம். 31

‘ என்னை மறந்தா போய்விட்டாய் ?
இளமையும் அழகும் நிறைந்தவளே !
உன்னை நாடி வந்தவருள்
ஒருவன் நானென் றறியாயோ ? 32

ஆறிள வரசிகள் கூந்தல்களை
அறுத்து வாவென் றேவினை நீ.
வேறெதிர் பேச்சுப் பேசாமல்
விரைந்து சென்றேம் நாற்றிசையும். 33

‘ பொன்போல் மேனிப் பவளஇதழ்ப்
பூப்போல் உண்கண் மங்கையர்கள்.
அன்பாய்க் கொஞ்சி இருக்கையிலே
அளகம் கொய்து வந்தேனே. 34

‘ கடலுக் கப்பா லுளநாட்டில்
கன்னிப் பருவக் காதலினல்
மடமை கொண்ட ஐவர்களின்
மணமிகு கூந்தல் கொய்தேனே ! 35

‘ ஐந்திள வரசிகள் கூந்தலிதோ
அங்கையில் பார் ’ எனக் காட்டினனே,
‘ ஐந்தொடு மற்றொரு கூந்தலைநான்
அடைய வேண்டும் ’ என்றனளே. 36
‘ மைந்தன் இவனே வீரன் ’ என
மங்கையும் சாய்ந்தனள் அவன்மீதே.
‘ ஐந்திள வரசிகள் கூந்தலைநீ
அறுத்துக் கொணர்ந்தாய் ஆயினுமே, 37

‘ ஆறிள வரசிகள் கூந்தலைநான்
அடையா மல்உனை மணவேனே.
வேறொரு மங்கையின் கூந்தலைநீ
விரைவில் கொணர்போ’ என்றனளே. 38

கொடிய மனத்தள் இவ்வாறு
கூறி அவனை இகழ்ந்திடவும்,
கொடியின் மலரைக் கொய்வதுபோல்
கொய்தான் அவள்தன் கூந்தலையே. 39

அலறினள் ஓவென் றதுகண்ட
ஆல்டன் பிரபுவின் அருமைமகள்
கலகல என்று கண்ணீரைக்
கடலின் கரையில் சொரிந்தனளே. 40

‘ அழகால் கர்வம் கொண்டவளே,
அழகுக் கேற்ற அன்பில்லாய்,
அழுவாய், வீட்டில் போய்’ என்றே
அவனும் படகில் சென்றேனே. 41

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்.

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச் சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக் கண்டு ஏமாறுதீர்கள் !

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

நமது நாட்டின் பழைய ஸ்வராஜ்யம்

" தராசு "

நமது நாடான இந்தியாவின் பழைய காலச் சிறப்பு, பொன்னொளி பெற்ற தாகத் தானிருந்திருக்கிறது. பழைய காலத்தில், இந்தியாவிற்குள், பல சிறு தேசங்கள் (ராஜ்யங்கள்) குடியரசுகளா கவேதா னிருந்திக்கிறதாகத் தெரியவரு கிறது. ஐம்பத்தாறு ராஜ்யங்கள் இருந் தனவென்றும், அவைகள் யாவும் தனித்தனியே சுதந்திரமாகத்தானிருந் தனவென்பதும் சரித்திரம் தெரிவிக்கும் பழைமை. ஒவ்வொரு ராஜ்யமும், அத னதனுடைய நிர்வாகத்தை நீதியுடனும், தர்மத்துடனும் நடத்தப்பட்டு வந்தன. நிர்வாகத்துக்கு 'அரசியல் நூல்' இருந் தது. சாணக்கியருடைய அர்த்த சாஸ் திரம், சுக்ரநிதி முதலிய நூல்கள் அர சாங்கத்தின் நிர்வாகத்தைப்பற்றிக் கூறி யிருக்கின்றன. இதைப் பொதுவாக தண்ட நீதி என்பார்கள். தண்ட நீதிக்கு உயர்வை அக்காலத்திய புலவர் களும், அரசர்களும் கொடுத்திருந்தார் கள்.

" மஜ்ஜேத்திரயி தண்ட நீதௌ ஹதாயாம்
ஸர்வ தர்மா: ப்ரக்ஷ்யெயு :

அதாவது தண்ட நீதியானது குறைவு பட்டால், தர்மங்கள் குறைகின்றன என அறிவிக்கிறது.

தண்ட நீதியில் சமூகத்தைப்பற்றியும் அரசுகளின் அமைப்பைப்பற்றியும், உற் பத்தி, நிதி, மந்திரி, அரசாங்க அதிகாரி சேனைபலம், சேனாதிபதி, கல்வி, கைத் தொழில் படையெழுச்சி, குடிகளின் தன்மை முதலியவைகளைப்பற்றி வெகு அழகாக கூறப்பட்டிருக்கின்றன. ஐத் ரேயப் பரமாணம் என்னும் நூலில் அரசனுள்ள ராஜ்யத்தை ஸ்வராஜ்யம் என்றும், அரசனில்லாத ராஜ்யத்தை வைராஜ்யம் என்றும் கூறப்பட்டிருக் கிறது. இதனால் பண்டைய காலத்தி லிருந்தே, குடியரசும், முடியரசும் இருந்ததெனத் தெரியவருகிறது. அர சாங்கத்திற்கு ஏழு அங்கங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அரசன், மந்திரி கள் (அமாத்யர்), மாகாணங்கள் (ஜனப தம்), துர்க்கம் (கோட்டை), பொக்கி ஷம் (கோஷம்), படை (தண்டு), நேசக்கட்சி (மித்திர) என்பதாகும். இவ்வேழு அங்கத்திற்கும் அரசன் சிறந்த அவயவம்.

அரசர்கள் ஜனங்களினால் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்; ஜனங்களினால் தள்ளவும் முடியும் என்பதை ரிக்வேத மும், அதர்வணவேதமும் கூறுகின்றன. அரசன், மக்கள் இன்புற்று வாழச் செய்யவேண்டும். 'ராஜா பிரக்ருதி ரஞ்சனத்' என்று காளிதாஸர் கூறி யுள்ளார். மன்னர்களுக்குச் சக்கர வர்த்தி சாம்ராட் என்ற பட்டங்க ளுண்டு. மன்னர்களுக்குச் சில அன் றாட விதிகள் இருந்தன. பகலையும், இரவையும் 8 × 8 பதினாறு பிரிவுகளாகச் செய்து, ஒவ்வொரு பிரிவிலும் அரச னுக்குக் காலக்கடமை நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. பகல்நேரத்தில் ராணுவம், மக்களுடைய குறைகள், அறிவிற்கு இன்பம் தரும் சர்ச்சைகள், கணக்குகள் பார்த்தல், படை, ஆயுதசாலை முதலிய வைகளைப் பார்வையிடுவதும் பகல்பொழு துக் குண்டான கடமைகள். முன் இர வில், தூதர்களிடமிருந்து வரும் ரகசி யங்கள், சங்கீதம் போன்ற லலித கலை களை அனுபவிப்பதும், பிறகு துயிலப் போவதும் பழக்கம். அதிகாலையில், ஆராய்ச்சியும், தூதர்களை வெளியிடங் களுக்கு அனுப்புவதும், வழக்கமாக அரசன் நடக்க வேண்டும் என்ற நியதி இருந்தது. அரசாங்கத்தை வகிக்கும் கடமையானது மிகுந்த பொறுப்பையும்,

கஷ்டத்தையும் கொண்டது என்பதை அர்த்தசாஸ்திரம் பின்வருமாறு கூறுகிறது.

“ ராஜ்யம் ஹிராம ராஜதர்மானு விருத்தி பரதந்தத்ரஸய பூபதேர் மஹத் அப்ரீதிஸ்தானம் ” எனப்படுகிறது.

மக்களைத் துன்புறுத்தாதபடி, நியாயமான கடமையினுல் ஒரு லட்சம் வெள்ளியை வருமானமாகக் கொண்ட அரசனுக்குச் சாமந்தன் என்றும், மூன்று லட்சம் வெள்ளியை வருமானமாகக் கொண்ட அரசனுக்கு மாண்டலீகன் என்றும், இருபது லட்சம் வருமானம் கொண்டவனுக்கு ராஜன் என்றும், ஐம்பது லட்சம் வருமானம் கொண்டவனுக்கு மஹா ராஜா என்றும், ஒரு கோடிக்கு ஸ்வராட் என்றும், ஐம்பது கோடிக்கு ஸாம்ராட் என்றும் பூமண்டல முழுவதையும் ஆள்பவனுக்கு ஸர்வ பௌமன் என்றும் பெயரிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசாங்க நிர்வாகத்துக்கு ஸமிதி ஸபா, என இரண்டு சங்கங்களுண்டு.

ஸமிதி என்னும் சங்கத்தின் பொது மக்களைக் கூட்டி, அரசியல் விஷயங்கள் பேசப்படும். ஸபையில், ஜனப்பிரதிநிதிகளும், அதிகாரிகளும் கலந்து அரசியல் விவகாரங்களைப் பேசுவார்கள். இரண்டு சங்கத்திற்கும் அரசனே தலைமை வகிப்பார். ஸமதி பிரதி தினமும் கூடி அரசியல் விஷயம் ஆலோசிக்கப்படும். இவைகளைத்தவிர மந்திரி பரிஷத் என்ற மந்திராலோசனை சபையுமுண்டு ; இதில் உயர்தர அதிகாரிகளும், சிலகுறிப்பிட்டவர்களும் தான் கூடுவார்கள். மந்திராலோசனையின்றி அரசன் எக்காரியத்தையும் செய்யக்கூடாது. “ மந்த்ர ஸம்பதாஹி ராஜ்யம் ீயதே” எனக் கூறப்பட்டிருக்கிறது. ஐந்துவிதமான சபைகள் இருந்ததாகவும் தெரிகிறது.

1. ஜனசபை : இது ஜனப்பிரதிநிதிகளைக் கொண்டது. மக்களுடைய அபிப்பிராயத்தை உடனடியாக அரசனுக்குத் தெரிவிக்கக்கூடும் சபை. 2. புரோகிதர் சபை: இதில் நாட்டின் மதசம்பந்தமான விஷயங்களை ஆலோசிப்பது. 3. வைத்தியசபை: மக்களுடைய ஆரோக்கிய விஷயமாக ஆலோசிக்கும் சபை. 4. சோதிடசபை: அரசாங்கத்தின் விசேஷ காரியங்களுக்குகந்த காலத்தை அறிவிக்கும் சபை. 5. அமைச்சர் சபை : நாட்டின் வருமானத்தை விசாரிப்பது, இது சம்பந்தமானவைகளைக் கொண்டது. அரசனுக்குப் பத்துவிதமான மந்திரிகள் இருந்திருப்பதாகவும் அறியமுடிகிறது. புரோஹிகர், பிரதிநிதி, பிரதானி, ஸசிவன், மந்திரி, பிராட், விவாகன், பண்டிதன், சுமந்தரகன், அமாத்யன், தூதன் ஆகியவர்கள் தான்.

அரசாங்க நிர்வாகமானது பதினெட்டு இலாக்காக்களாக பிரிக்கப்பட்டிருந்தது. இதை சாணக்கியர், ‘ அஷ்டாதசதீர்த்தா ’ : என்று கூறுகிறார். ஒவ்வொரு பிரிவும், தனித்தனியதிகாரியிடம் விடப்படும். சந்தரகுப்தனுடைய ஆட்சியில் ஆறுவித சபைகளும், தனித்தனி யதிகாரிகளு மிருந்ததாக மெகஸ்தனிஸ் கூறுகிறார். நீதிஸ்தலத்தில், தர்மஸ்தேயம், கண்டகசோதனம் என இரு பிரிவுகளாக இருந்ததாகத் தெரிகிறது.

கிராமங்களின் நியாஸ்தலங்களிருந்தன. நியாயதிபதிகளுக்குத் தார்மீகான் என்றும், முக்கியமான நீதிபதிக்கு பிராட் விவாகா என்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.பிரத்யட்சம், யுக்தி, அனுமானம், உபமானம் முதலியவற்றைக்கொண்டு நியாயம்வழங்கப்படும். வாதி பிரதிவாதிகளுககு அர்தீ - பிரதி யர்தீ என்று பெயர்.

அரசாங்கம் நடைபெறக் குடிமக்கள் செலுத்தவேண்டிய கடமையைத்தான் அரசிறை எனப்படும். அரசிறையானது, நாட்டின் பொருள் வருவாயினின்று வசூலிக்கப்படும். ஜனங்களை வருத்தி வசூல் செய்யக்கூடாது என்பது மொழி. எந்த அரசாங்கத்தில் அதிகாரியானவன் குடிகளை வருத்தி பொருள் திரட்டுகிறார்களோ, அந்த அரசாங்கம் குடிமக்களுடைய கண்ணீரால் அழியும் என்று சுக்ரநிதி சொல்லுகிறது. இதையே ஆதாரமாகக் கொண்டு நம் புலவர்கள், “ வழை

யழுத கண்ணீர் கூரிய வாளையொக்கும்" என்றார்கள். ஆறிலொரு கடமை, எட்டிலொரு கடமை, பதினாறிலொரு கடமை, வளங்களுக்குத் தக்கபடி வசூலிக்க வேண்டும். அரசாங்கத்திற்குப் பொருள் வரவிற்கு ஏழு வழிகள் என்று சாணக்கியர் கூறுகிறார். "நகரங்கள், கிராமங்கள், சுரங்கங்கள், கட்டிடங்கள், காடுகள், மேய்ச்சல்தரை, வர்த்தக வழிகள் என்று சொல்லியிருக்கிறார். இவைகளையும் தவிர இன்னும் சில வழிகளைக் கூறியுள்ளார். 1. சாகவிதவரி (பிண்டகர), 2. விளைவில் ஆறில் ஒரு பங்கு (ஷட்பாகர்), 3. சேனைக்கு இரையளிப்பு (சேனாபத்தா), 4. வைதீகவரிகள் (பலி), 5. குறுநில மன்னர்களிடமிருந்து பெறும் கப்பம் (கரா), 6. பலாத்கார வரி (உத்ஸங்க), 7. மன்னர் திறை (பார்ஸ்வ), 8. நஷ்டஈடு (பாரிஹீநிக), 9. சன்மானம் (ஔபாயனிக), 10. பொதுச்சாலைகளிலிருந்து வரும் கூலிப்பணம் (கௌஷ்டியக) என்பன. அரசன் குடிகளிடமிருந்து வரி வசூலித்து, அப்பணத்தைக் குடிகளுக்கே மீண்டும் உபயோகப்படுத்த வேண்டும் என்று காளிதாஸன், ரகு வம்சத்தில் பின் வருமாறு "பிரஜானாம் ஏவபூத்யர்த்தம், ஸதாப்யோபலிம் அக்ரஹீத் ஸஹஸ்ரகுணம் உத்ஸரஷ்டம் ஆததிஹிரஸம் ரவி :" என்று கூறியிருக்கிறான்.

அரசனுடைய பொக்கிஷத்தில் இருபது வருடத்திற்கு வேண்டிய தொகை சதாயிருக்க வேண்டும் என்று சுக்ரநிதி கூறுகிறது. ஆனால் சாணக்யன் பொக்கிஷமானது நீண்டகாலத்திற்கு உபயோகப் படுத்தும்படி சதாயிருக்க வேண்டும் என்று கூறுகிறார். வரிகளை வசூலிக்கும் பெரிய அதிகாரிக்கு ஸமாஹர்தா என்று பெயர். அதாவது கலெக்டர் (சிலர் கவர்னர்போல் எண்ணுகிறார்கள்). பொக்கிஷதாரருக்கு சன்னிதாதா என்றும் பெயர். இரண்டு பேரும், சரியான கணக்குகளைத் தினமும் அரசனிடம் கூறவேண்டும்.

ஏரி, குளம், வாய்க்கால், நதி முதலியவைகள் மிகவும் ஜாக்கிரதையாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தன. மிருகங்களுக்கு ஆஸ்பத்திரிகூட இருந்ததாகத் தெரிகிறது. அசோக சக்ரவர்த்தியின் காலத்தில், மிருகங்களுடைய ஆஸ்பத்திரி மிகவும் சிறப்பாக நடந்ததாகச் சிலாசாஸனங்கள் கூறுகின்றன. அநாதைக் குழந்தைகளை சம்ரட்சிக்க இடங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. சிலாசாஸன ஆராய்ச்சி சாலைகளுமிருந்தன. போக்கு வரத்துக்குச் செம்மையான பாதைகள் அமைத்திருந்தார்கள். பாதைகளில் ராஜபாதை மிகவும் சிறந்தது. இது 32 அடி அகலம் கொண்டிருக்கும். பல சிறியபாதைகளுமுண்டு. ஆண், பெண் இரு பாலருக்கும் தனித்தனி ஆஸ்பத்திரிகளும், பிரசவ ஆஸ்பத்திரிகளும், கோயில் மான்யங்களைக் கொண்டு ஆஸ்பத்திரிகளும் நடந்து வந்திருக்கின்றன. பண்டைய இந்தியாவிலிருந்து வைத்தியர்கள் யௌவன தேசத்துக்குப் போயிருக்கிறார்கள். வைத்திய கல்விச் சாலைகளுமிருந்திருக்கிறன. ஜனத்தொகை கணக்கெடுக்கும்முறை வெகு பழைமையானது என்று அர்த்தசாஸ்திரம் கூறுகிறது. இவ்விதமாகப் பழையகால ஸ்வராஜ்யமானது, மிகவும் உயர்வாக பரிபாலிக்கப்பட்டு வந்ததுபோல், இனியும் நமது நாடு மேன்மையடைய வேண்டும் என்ற கருத்துடன், நமது பழைய விஷயங்களை நாம் தெரிந்து கொள்கிறோம்.

—

எப்ரல் 9ந் தேதி

வெளிவருகிறது...

சந்திரலேகா

ஜெமினியின்

அற்புதமான

சிருஷ்டி

வேதத்தின் கடிதம்

" த்விஜன் "

அவசரமாக ரூமிற்கு வந்தான் சுந்தரம்; அன்று சனிக்கிழமை. ஒரு மணியோடு ஆபீஸ் முடிந்து விட்டது. கதவைத் திறந்ததும் ஒரு கவர் தன் விலாசத்தி லிருப்பதைக் கண்டான்.

அக்கவரைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். "வேதம்" என்ற கையெழுத்து அவனைப் பிரமையில் ஆழ்த்தி விட்டது. இதுவரை யில்லாமல் திடீரென்று அவளிடமிருந்து ஒரு கடிதம் இப்பொழுது வருவானேன்?

அன்புள்ள சுந்தர அத்தானுக்கு,

வேதம் அநேக நமஸ்காரம். நான் உங்களுக்குக் கடிதம் எழுதுவதே தப்புதான். வயது வந்த ஒரு பெண்—அதுவும் மணமாகாதவள்—உங்களுக்கு எழுதுவது மிகவும் தவறு! ஆனாலும் என்னால் எழுதாமலிருக்க முடியவில்லை. அம்மா அப்பாவிற்குத் தெரியாமல் தான் இதை எழுதுகிறேன்.

நான் எழுதும் முதல் கடிதம் இது தான். இதுவே கடைசியானாலும் ஆகலாம். நீங்கள் வேலைக்காகச் சென்னை போகும் பொழுது, என்னை எவ்வளவோ துக்கத்தில் ஆழ்த்தி விட்டுப் போனீர்கள். எப்பொழுதும் என்னிடம் பேசிச் சல்லாபித்து உங்கள் பசியை ஆற்றிக் கொண்டீர்கள். புறப்படும் பொழுதுகூட ஏதேதோ ஆசை வார்த்தைகளால் என்னை மயக்கி என் மீதே 'உயிர்' உள்ளவர் போல் காட்டிக் கொண்டீர்கள். பெரும் நாவல்களில் வரும் 'காதலன்' என்று உங்களை நம்பினேன். ஆனால் நீங்கள் நாடகத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு நடிகர் என்பதை என் எளிய புத்தியால் கண்டு பிடிக்க முடியவில்லை.

உங்கள் திருமணப் பத்திரிகை வந்தது. மிகவும் சந்தோஷம்! தங்கள் ஆசைநாயகி சாந்தா என்னைவிடப் பன்மடங்கு சிறந்தவளா யிருக்கலாம். ஆனால் என் மனம் அதை பெரிதும் நினைத்து வருந்துகிறது. மணம் முடிந்து இன்று பத்து நாட்களுக்கு மேலிருக்கலாம். 'அவளும்' உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பாள். காதல் ததும்பும் வார்த்தைகள் நிறைந்திருக்கும் அது. அதன் மணத்தைக் கெடுக்கும் என் துக்கக் கடிதத்தை இத்துடன் முடிக்க ஆசைப் படுகிறேன்.

ஆனால் ஒன்று மாத்திரம் நான் தங்களுக்கு எழுத விரும்புகிறேன். தங்களுடைய மாய வலையில் சிக்கி நான் இதுகாறும் இருந்தேன். என் உள்ளத்தை உங்களிடம் காணிக்கையாகக் கொடுத்து வைத்தேன். அதை நீங்கள் முள்ளின் மேல் உதறி எறிந்து விட்டீர்கள். அதனால் பதறுகின்றது என்னுள்ளம்! உங்களிடம் நான் கேட்பது ஒன்று தான். உங்கள் வாழ்க்கையில், மாமன் மகளான என் வாழ்க்கையும் ஐக்கியமாக இருந்தது என்று மாத்திரம் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

இன்னும் சில காலத்தில் என்னை ஒருவன் மாலையிடுவது நிச்சயம். பிறகு ஆசையற்ற, காதலற்ற, சாரமில்லா வாழ்க்கைதான் எனக்கு!

மீண்டும் என் நமஸ்காரங்கள்.

தங்களை என்றும் மறவாத

—வேதம்

கடிதத்தை நாலைந்து முறை திருப்பித் திருப்பிப் படித்தான். அக்கடிதத்தில் அவனறிந்தது என்ன? அவன் மணம் நடந்ததும், அதனால் வந்த வினையும்!

ஆனால் அவனுக்கு இன்னும் மண மாகவில்லையே ? சாந்தா என்ற பெய ரைக் கூடவல்லவா சொல்லுகிறாள் ? அம்மாதிரி ஒரு பெண்ணைப் பற்றி அவன் கேள்விப்பட்டதேகூட இல்லையே?

வேறு யாருடைய கடிதமாகவாவது இருக்கலா மென்று விலாசத்தைப் பார்த்தான். அவனுடையது தான். சந் தேகமேயில்லை ! ஆனால்?

அவன் வேதத்தைத் தன் உயிராகவே தான் மதித்தான். நாள் தவறினாலும் தன்கூட வசிக்கும் சிநேகிதன் குமார சாமியிடம் ஒரு நாளாவது வேதத்தைப் பற்றிப் பேசாத நாளில்லையே ? அப்படி யிருக்கும்பொழுது — தனக்கு மணம் முடிவதற்கு முன்பே யார் இந்தச் சதி செய்திருக்கிறார்கள் ?

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை விடு முறையானதால் நேரில் சென்று விஷய மறியத் தீர்மானித்து விட்டான்.

2 .

வாசலில் கோல மிட்டுக்கொண்டிருந் தாள் வேதம். சப்தமிடாமல் அவள் பின்னால் சென்று நின்றான் சுந்தரம். அவன் நினைத்தாற்போல் அவளைப் பிர மிக்க வைக்காதபடி செய்து விட்டது தும்மல் ! தும்மி விட்டான்.

தும்மினவுடன், திடீரெனத் திரும்பின வேதம், அத்தானைக் கண்டதும் ஸ்தம் பித்துவிட்டாள். கோலத்தைப் பாதியி லேயே விட்டுவிட்டு, "அம்மா, அத் தான் வந்திருக்காம்மா !" என்று துள்ளி ஓடினாள் வேதம், உள்ளே !

"வாடாப்பா ! என்னடா இப்படி திடீர்னு வந்துட்டே லெட்டர்கூடப் போடாமல் ! நேத்திக்குக் காக்காகூட கத்தித்து. யாராவது வருவான்னு நினைச்சேன். நீதானு ! வாடா...." என்றாள் அவன் மாமி !

வேதத்தின் சாதாரணமான, எப் பொழுதுமுள்ள நடத்தை அவனை ஒரு கணம் திணற வைத்தது ! அவன் எதிர் பார்த்தது வேறு. 'என்னடா சுந்தரம், கலியாணமாச்சா ? பெண் எப்படி ? குணம் எல்லாம் நன்னாயிருக்கோன்னோ?" என்று கேட்பார்கள். வேதம், மூஞ் சியை அழாத குறையாக வைத்துக் கொண்டிருப்பாள் என நினைத்தான். ஆனால் அவன் காண்பது சாதாரணமா யிருக்கிறதே ! கடிதத்தை எழுதிவிட்டு அப்படி நடக்க முடியுமா ஒரு பெண் ணால் ?—அதுவும் இந்த வேதத்தால்? அவன் மனம் ஒரு மாதிரி திண்டாடிக் கொண்டிருந்தது.

காப்பி சாப்பிட்டு விட்டு எல்லாரும் பேசிக் கொண்டிருந்தனர். எதெ தையோ பற்றிப் பேசினார்கள். ஆனால் அவன் கலியாணத்தைப் பற்றி யாரும் பேசவேயில்லை. அக்கடிதம் எங்கிருந்து வந்தது ? அதில் சொல்லியிருந்த கலி யாணம் ? அவனால் பொறுக்க முடிய வில்லை.

பேசிக்கொண்டிருக்கும்போதே, "யாரோ எனக்குக் கலியாணம் என்று" ... என்று சுந்தரம் முடிப்பதற்குள், "ஆமாம், அதது காலா காலத்திலே நடக்க வேண்டியதுதானே ?" என்றார் அவன் மாமா !

"இல்லே, திடீர்னு......."

"கடிதத்தை எதிர் பார்க்க முடிய வில்லே. அத்திம்பேர் என்னிடம் சொன் னார். நான்தான் வேதத்திற்கு என்ன அப்படி வயசாச்சான்னு சும்மாயிருந் தேன்."

"நீங்கள் செய்ததைப் பற்றி நான் சொல்லவில்லே. நான் எதிர்பார்க்காத படி, வேதம் அப்படி......"

"உனக்கு என்ன தெரியும் ? தினம் பொழுது விடிந்தால் 'அத்தான் அப்ப டிப் பேசுவான் இப்படிப் பேசுவான்'னு எங்க உயிரைன்னா வாங்கிவிட்டா ?"

"ஆனால் அந்த சாந்தா?......"

"சாந்தாவுக்கு அப்பவே கலியாண மாயிடுத்தே ? அவள் என்ன சிறுசா ? பதினேழு வயசாயிடுத்தே ?"

"அப்படின்னா ? அந்த லெட்டர்...?"

"என்ன லெட்டர் ? எப்பவோ நடந்த சண்டை யெல்லாம் இன்னும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கயே !"

"என்ன மாமா, நான் அப்படிச் செய்வேனு ?"

"நீ அப்படிச் செய்வேன்னு வேதத்தை உனக்குக் கொடுப்பேனு ?"

"இல்லே மாமா ! நிஜமாகச் சொல்லி விடறேன். வேதத்துடைய கடிதாசியைப் பார்த்ததும்......"

"வேதத்துடைய கடிதாசா ?...கடிதாசி எழுதினுளா என்ன அவள் ? எண்டீ......"

"இல்லேயப்பா, நான் ஒண்ணும் எழுதலே ! அத்தான் பொய் சொல்ரு ! அத்தான் 'அட்ரஸ்' கூட எனக்குத் தெரியாதே ?"

"இல்லே, நிஜமா எழுதியிருந்தாள்."

"இல்லேயப்பா.நான் எழுதவேயில்லே. எனக்கு ஒன்றுமே தெரியாது"

"நான் பொய் சொல்றேன்னு இதோ பாருங்கோ" என்று சட்டைப்பையைத் துழாவினுன். அதை எடுத்துக் கொண்டு வாராதது பிறகுதான் அவன் நினைவுக்கு வந்தது.

அவர்களுக்கு அது தெரியுமா ? கேலி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

"இருந்தால் காண்பியுங்களேன் பார்க்கலாம்.பொய் சொல்றதைப் பாரு?" என்ருள் வேதம்.

சமயத்தில் சமாளித்துக் கொள்ள "சும்மா சொன்னேன். அதுக்குள்ளே பயப்படறுளே" என்ருன் சுந்தரம் அசடு வழிய சிரித்துக் கொண்டே. வெளியே சிரித்தானே ஒழிய உள்ளே மனம் ஆச்சரியமடைந்தது. அம்மர்மத்தின் சூழ்ச்சி புரியவில்லை.

அவள் கடிதம் கண்ணெதிரே தோன்றிக் கொண்டே இருந்தது.

3

"அப்பா ! ஆபீஸ் சேவகன் இந்த லெட்டரைக் கொடுத்தான். அத்திம்பேர் எழுதியிருக்காப்போலிருக்கு" என்ருன் வேதத்தின் அண்ணு ராஜு.

கடிதத்தைப் பிரித்துப் பார்த்த அவன் தந்தை சிரித்துக்கொண்டே, "அடீ ! இதைப் பாரு ! சுந்தரம் காரியமாத்தான் வந்திருக்கான். ஆனிக்குள்ளே முகூர்த்தம் நிச்சயம் பண்ணச் சொல்லி அத்திம்பேர் எழுதியிருக்கா ! இவன் அத்திம்பேருக்கு ரொம்ப கண்டிப்பாக கடிதாசி எழுதினுனும். சீக்கிரம் கலியாணத்தை முடிக்கச் சொல்லிக் கடிதாசி போட்டிருக்கிருர்" என்ருர்.

சுந்தரத்துக்குத் தூக்கிவாரிப் போட்டது. கலியாண விஷயமாகத் தன் தகப்பனுக்கு அவன் கடிதமே எழுதினதில்லே. அப்படியிருக்கத் தான் கேட்பதென்ன ?

"நமக்கென்ன ? எப்ப வேணும்னுலும் முடிச்சூடுறது. அசடு வழிய முகத்தை வெச்சுண்டு சுந்தரம் வந்தபோதே நினேச்சேன்" என்ருள் அவன் மாமி !

"நான் ஒண்ணும் எழுதலே மாமா !" என்ருன் அவன். ஆனுல் கடிதம் அவருக்குக் கிடைத்ததென்னமோ உண்மைதானே ?

* * *

ஆனி மாதம் முதல் முகூர்த்தத்தில் சுந்தரமும் வேதமும், கணவன் மனேவியாயினர்.

தனிமையில் சந்திக்கச் சந்தர்ப்பம் வாய்த்தபொழுது சுந்தரம், "வேதம், நிஜமாச் சொல்லு, நீ அந்தக் கடிதாசி எழுதலேயா ?" என்று கேட்டான்.

"இனிமேல்தான் எழுத ஆரம்பிக்கணும்" என்று பதிலளித்தாள அவள்.

"அப்படின்னு ? அதை யார் எழுதினுள் ?"

"வேறு யாராவது 'காதலி' உங்களுக்கு இருக்காளோ என்னமோ, யார் கண்டது?" என்ருள் அவள்.

மேற்கொண்டு பேசினுல் விபரீதமென்று சும்மாயிருந்தான் சுந்தரம்.

4

'லீவு' முடிந்து ரூமிற்கு வந்தான். கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும் மேஜைமேலிருந்த ஒரு 'கார்டு' அவன் கவனத்தைக் கவர்ந்தது. வேதத்தின் கடிதத்திலிருந்த அதே கையெழுத்து.

ராஜு எழுதியிருந்தான், அதே அறையில் வசிக்கும் குமாரசாமிக்கு.

நண்பா!

மணம் மிக விமரிசையாக நடந்தது. வேதம் எழுதினாற்போல் நான் எழுதின கடிதமும், சுந்தரம் எழுதினாற்போல் நீ அவன் அப்பாவுக்கு எழுதின கடிதமும், காரியத்தை முடித்து விட்டது. பின் என்ன? இங்கே இவள் "அத்தான் அத்தான்" என்பதும், அங்கே அவன் 'வேதம், வேதம்' என்பதும் நல்ல வேடிக்கை! நீயும் நானும் நண்பர்கள் என்று சுந்தரத்துக்குத் தெரியாது! அது சரி, உன் மணத்திற்கு யார் கடிதம் எழுத வேண்டும் என்று உடனே பதில் போடு" என்றிருந்தது அக் கடிதத்தில்.

வேதத்தின் கடிதத்தின் மர்மம் சுந்தரத்திற்கு உடனே விளங்கிவிட்டது!

பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

கந்தகராஜ ரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது.

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு:

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்:

மானேஜர்,
ஆர்ய வைத்தியசாலை,
கோட்டைக்கல், தென் மலையாளம்

பிச்சைக்காரன்

"கிரன்"

மாயவரத்திற்கு எப்பொழுதாவது நீங்கள் போக நேர்ந்தால் இதை மறக்காமல் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் :

"ஓரணாக்காசு இருந்தாக் கொடுங்க சாமீ ; ஒரு இட்லி வாங்கி சாப்பிட்றேன்—"

இது ஒரு மந்திரமல்ல. மாயவரத்திலுள்ள பஸ் ஸ்டாண்டுகள், சினிமாக் கொட்டகைகள், கடைத் தெருக்கள் முதலிய இடங்களில் நடமாடும் ஒரு விநோத உருவம் வாய் ஓயாது உச்சரிக்கும் சொற்களே. யுத்தகாலத்திற்குமுன் காலணாவாக இருந்தது இடையில் அரையணாவாக மாறி நாளடைவில் ஓர் அணாவாகிவிட்டது.

கரிய நிறம். ஒட்டியுலர்ந்த தேகம். குழிவிழுந்த - ஆனால் ஒளிவீசும் - கண்கள். ஜலசம்பந்த மற்றுப் போய் வெகு நாட்களான 'மாயவரத்துக் கப்பிமண்' சிவப்பும் அழுக்கும் நிறைந்த கந்தல் துணிகள். எண்ணெய்ப் பசையற்ற, செம்பட்டையும் நரையும் கலந்த, மண்ணும் அழுக்கும் ஏறிச் சடைவிழுந்த பரட்டைத்தலை. நிதானமான நடை. பிச்சை கேட்பதிலே அமரிக்கையான ஓர் அலாதி தோரணை ; அது கிடைக்காதபோதும் ஆயாசமற்ற தன்மை.

மேலே கூறிய இரண்டு வார்த்தைகளைத் தவிர அவன் வாயினின்றும் வேறு மொழிகளை யாரும் கேட்டதேயில்லை. எவருடனும் பேசுவதேயில்லை. பார்வைக்கு அசங்கியமாகவும், பயித்தியக்காரன் போலவும் தோற்றமளித்தாலும் ஊன்றிக் கவனித்தால் "வாழ்ந்து கெட்டவன்" போலத் தோன்றும். ஆனால் பகட்டில் மறைந்து நிற்கும் சமூகத்திற்கு அவனை அப்படிக் கவனிக்க அவகாசமேது ?

* * *

சுமார் பத்து வருஷங்களுக்கு முன் நான் மாயவரம் சென்றபோது திருவாரூர் பஸ் ஸ்டாண்டிலே முதன் முதலில் அவனைச் சந்தித்தேன். இரவு ஒன்பது மணி, மையிருட்டு. திருவாரூரிலிருந்து மாலை ஏழு மணிக்கே வரவேண்டிய 'ட்ரிப்' இரவு ஒன்பது மணியாகியும், வழியில் என்ன கோளாறோ என்னவோ, வந்து சேரவில்லை. எல்லோரும் கவலையுடன் உட்கார்ந்திருந்தனர். நான் ஒதுப்புறமான ஓரிடத்திலே குழப்பத்துடன் நின்றிருந்தேன்.

வண்டு ரீங்காரம் செய்வது போன்ற சத்தம்கேட்டுப் பின்புறம் திரும்பினேன். அந்த இருட்டுக்கு அந்த உருவம் மிக்கப் பயங்கரமாகவே – தோற்ற மளித்தது. நானும் முதலில் அசைப்பில் பார்த்துத் திடுக்கிட்டே போனேன். அவன் நிதானமாக இரண்டாம் முறையும் 'காலணாக் காசு இருந்தாக் கொடுங்க சாமீ ; ஒரு இட்லி வாங்கி சாப்பிட்றேன்' என்றான். நானவனைப் பொருட்படுத்தாமல் அலட்சியமாகச் சற்று விலகிநின்று தெற்கே நோக்கினேன். 'திருவாரூரிலிருந்துவரும் பஸ்தான் மறுபடி திரும்பிச் செல்ல வேண்டும் ; அது வராமலே இருந்துவிட்டால் என்ன செய்கிறது ?'—இப்படி நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவன் மறுபடி என்னை யணுகி மேலே கூறியபடிப் பிச்சை கேட்டான். என் மௌனத்தை லட்சியம் செய்யாமல் அவன் மேலும் மேலும் என்னை உபத்திரவம் செய்துகொண்டேயிருந்தான். என் சகிப்புத் தன்மை எல்லையைக் கடந்தது. "பஸ்ஸைக் காணோமே என்று நான் மூக்காலழுது கொண்டு நிற்கிறேன் ; நீ வேறு பிராணனை வாங்க வந்துவிட்டாயோ ! போ, போ !..." என்று சீறி விழுந்தேன். அதையும் அவன் லட்சியம் செய்யவில்லை, அப்பால் செல்லவுமில்லை.

வேறு ஒன்றும் சொல்லவுமில்லை. அந்த ஒரே பல்லவியை அதே ஸ்தாயியில் நிதானமாகப் பாடிக்கொண்டே யிருந்தான். நான் சொன்னேன் :—" ஏய், இதோ பார், நான் செல்லவேண்டிய பஸ் மட்டும் இன்னும் கால் மணிக்குள் வரட்டும் ; ஓர் அணு தருகிறேன்."

அதற்குமட்டும் அவன் சிரித்தான். ஆகாயத்தை நோக்கி "அல்லா !" என்று கூவினன். அப்போது அவன் தாடியும் உயர்ந்து தாழ்ந்தது. பிறகு பஸ் வர வேண்டிய திக்கை ஊடுருவிப்பார்த்தான். பாவம், காலணுவுக்குத் தாளம் போடும் பக்கிரியால் என் விருப்பம் எப்படிப் பூர்த்தி பெறும் ? ஆனல்...என்ன ஆச்சர்யம் ! தூரத்தில் 'ஹார்ன்' சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் பஸ் லைட்டுகளின் ஒளியும் தெரிந்தது. பக்கிரியின் பிரார்த்தனைக்கிரங்கி ஆண்டவன்தான் அருள் புரிந்தாரென்றே என்மனம் நினைத்தது.

பஸ் வந்து நின்று அதிலுள்ளவர்கள் இறங்கினதும் ஏறிச் செல்லவேண்டியவர்கள் இடத்திற்குப் போட்டியிட்டனர். நானும் ஓடிச் சென்று ஒரு மூலையில் தொத்திக்கொண்டேன். என் மனம் ஓரளவு நிம்மதி பெற்றதும் அந்தப் பக்கிரியின் நினைவு வந்தது. "அவனுக்கு ஒரு அணுக்கொடுக்க வேண்டும்—ஆம், கட்டாயம் கொடுக்கவேண்டும்"—நான் பர்ஸிலிருந்து காசை யெடுத்தேன். அவன் அந்தப் பல்லவியைப் பாடிய வண்ணம் பஸ்ஸைச் சுற்றிக்கொண்டு நானிருக்குமிடத்திற்கு வந்து சேருவதற்குள் பஸ் புறப்பட்டுவிட்டது. அவசர அவசரமாக அவன் கையில் காசைப் போட்டேன். அப்போது விளக்கொளியில் அவன் முகம் எனக்கு நன்கு தெரிந்தது. பஸ் புறப்பட்டுச் சென்றது. வழியெல்லாம் அவன் நினைவு. மனக்கண்ணெதிரிலே அவன் தோற்றம். காதிலே வண்டுகளின் ரீங்காரம் போன்ற அந்தக் குரல் ஒலி. தாடி, மீசை, அழுக்காடை அனைத்தையும் களைந்துவிட்டு நல்ல உடைகளிலவனைச் சிருஷ்டித்துப் பார்த்த போது உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஒரு பிரபு போலவே தோற்றமளித்தான் எனது கற்பனையில். "ஆம் ; அவன் வாழ்ந்து கெட்டவன்தான் !"

சீச்சி ! இதென்ன மடமை ! எவனே ஒரு பிச்சைக்காரனைப்பற்றி இத்தனை சிந்தனையா ? வெட்கக்கேடு !...

என்னதான் முயன்றும் என்னலவனை மறக்க முடியவேயில்லை நெடுநாட்கள் வரையில்.

* * * *

சென்ற சித்திரையில் நண்பனின் கல்யாணத்தை முன்னிட்டு மாயவரம் சென்றேன். காலை ஆறு மணிக்கு ரயிலை விட்டிறங்கினதும் அருகிலிருந்த ஓட்டலை நோக்கி வேகமாகச் செல்லுகையில் 'அவன்' குறுக்கிட்டான். நீண்ட நாட்களுக்குப்பின் மறுபடி அவனைச் சந்தித்த தாலேற்பட்ட ஓர் உணர்ச்சி காரணமாக ஸ்தம்பித்து நின்றேன். சிறிது தூரத்தில் நின்றிருந்த அவனுக்கும் என்னைப் பார்த்ததும் என்ன தோன்றிற்றோ என்னவோ, ஏதோ முக்கியமான செய்தி சொல்ல வருபவன்போல என்னை நோக்கி வந்தான். நானவனைக் கண்கொட்டாமல் பார்த்தேன். அவனொரு பிச்சைக்காரன் தானே ; பட்டினிப் பசியில் வாடக்கூடியவன்தானே? ஆனல்—இடையில் சென்ற ஒன்பது வருஷத்தில் அவன் தோற்றத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. சரீரம் வாடவேயில்லை. அல்லா அவனைக் காப்பாற்றுகிறுர் போலும் ! அனதைக்குக் கதி ஆண்டவன்தானே !

"ஓரணுக் காசு இருந்தாக் கொடுங்க சாமீ ; ஒரு இட்லி வாங்கி சாப்பிட்றேன்—".

காலணுவிலிருந்து ஓரணுப் பிரமோஷன் !... இட்லியே கிடைக்காத பஞ்ச காலத்தில் காலணுவையும் இட்லியையும் சம்பந்தப்படுத்த அவனுக்கென்ன பைத்தியமா ? எல்லாவற்றிற்கும் கிடைத்த நாலு பங்கு ஏற்றம் அவன் பிச்சைக்கும் கிடைத்திருக்கிறது போலும் !

'என்னுடன் அதோ அந்த ஓட்டலுக்கு வா. வேண்டிய இட்லி வாங்கித் தரு

கிறேன்" என்று கூறிவிட்டு நான் நடந்தேன். அவன் தயங்கினான். நான் மேலும் மேலும் வற்புறுத்தவே நிதானமாக நடந்து வந்தான்.

"இவனுக்கு வேண்டியதைக் கொடுங்கள்" என்று ஓட்டல் முதலாளியிடம் நான் சொன்னபோது அவர் ஏனோ என்னை வெறித்துப் பார்த்தார். மறுபடியும், "இவனுக்கு நாலு இட்டலி கொடுங்கள் சார்!" என்று நான் அழுத்தமாகக் கூறவே அவர் தமது சிப்பந்திக்கு உத்தரவிட்டார். இட்டலி தரப்பட்டது. நாலும் நாலே வாய்! மேலும் கொடுக்கச் சொன்னேன். அப்பொழுது இட்டலிப் பஞ்சம் அவ்வளவாகத் தீரவில்லையென்றாலும் அந்த ஓட்டல்காரரின் அதிர்ஷ்டம் என் அதிர்ஷ்டத்தை ஒத்தது போலும்! வியாபாரம் கம்மி. போடுகிற சரக்குச் சீண்டுவாரற்று ஈ மொய்த்துக்கொண்டு கிடக்கிற வழக்கம். அன்று அவருக்கு சுக்கிரதசை. பக்கிரி உள்ளேயிருந்ததையெல்லாம் காலி செய்து கொண்டிருந்தான். நான் பல் துலக்கி முகம் கழுவி என் ஆகாரத்தை ஒருமாதிரியாக முடித்துக்கொண்டு அவனைக் கவனித்தேன். முகத்தில் திருப்திக் குறி தென்பட்டது. 'போதுமா?' என்றேன். தலையை ஆட்டிவிட்டு மேல் துணியில் கைகளைத் துடைத்துக்கொண்டே அவ்விடம்விட்டு நகர ஆரம்பித்தான். பில் பணத்தைக் கொடுத்துவிட்டு நானும் அவனைப் பின் தொடர்ந்தேன்.

அவன் ஜன சஞ்சாரத்தைக் கடந்து காவிரியாற்றங்கரையை யடைந்து அங்கிருந்த ஒரு மரத்தடியில் சென்று உட்கார்ந்தான். நான் பின்னாலேயே வந்ததை அறியானாகையால் உட்கார்ந்து என் பக்கம் திரும்பினதும், என்னைக்கண்டு ஆச்சர்யமடைந்தான். முகத்தில் கேள்விக் குறி. அருகில் உட்காரப்போனேன். துர்வாடை அசாத்தியமாக இருந்ததால் சற்றுத் தள்ளி உட்கார்ந்தேன். அன்று அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆர்வம் என்னைப் பலமாகக் கவ்விக்கொண்டது.

"உன் பெயரென்ன?"

அவன் வாய் திறக்கவில்லை. மறுபடியும் கேட்டேன். வானை நோக்கினான். மீண்டும் கேட்டதும் சிரித்தான். கெஞ்சும் குரலில், "சொல்லமாட்டாயா? உன் பெயர் என்ன?"—என்று நாலாவது தடவையாகக் கேட்டதும் அவன் சடக்கென்று திரும்பி உட்கார்ந்து கம்பீரமாக என்னை நோக்கி, "ஏன்?....எதற்காகக் கேட்கிறாய்?" என்று வினவினான். அந்த வார்த்தைகள் பிச்சைக்காரன் சொற்களாக இல்லை. நான் அயர்ந்தே போனேன். சமாளித்து, தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "சாதாரணமாகத்தான் கேட்டேன். உன்னைப் பார்த்தால் 'வாழ்ந்து கெட்டவனாக' எனக்குத் தோன்றுகிறது" என்று நான் கூறி முடிப்பதற்குள்........"நீ நினைப்பது சரிதான். ஆனால் என்னைப் பற்றித் தெரிந்துகொள்வதிலே ஏன் அத்தனை அக்கறை? அதில் உனக்கு என்ன லாபம்?" என்று கேட்டுவிட்டு என்னையே ஊன்றிக் கவனித்தான். அந்தப் பார்வையை எதிர்த்து நிற்கச் செயலற்ற எனது விழிகள் சுற்றிச் சுழன்று, கரைபுரண்டோடும் காவிரி வெள்ளத்தை நோக்கின. மறுபடி அவனே பேசினான்:

"பசியைப் போக்கினோம் என்கிற உரிமையில் என்னைப் பலவந்தம் செய்கிறாயோ?"—

"சிவசிவா! அப்படியொன்றுமில்லை. உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் நான் நிர்ப்பந்தம் செய்யவில்லை."

ஆம். மரியாதையாகத்தான் பேசினேன். அப்போதைய அவரது கம்பீரமான தோற்றமும், சொற்களும் ஒரு பெரிய மகானைப் போலிருந்ததால் 'வா போ' என்று பேசக்கூடிய துணிவை இழந்து விட்டவனானேன். ஒருமுறை கனைத்துவிட்டு அவர்பேச ஆரம்பித்தார்.

* * * *

"என் பேர் நரசிம்மன்—"

நான் திடுக்கிட்டேன்.

"நீங்கள் முகம்மதியர் இல்லையா?"

"சு!....எல்லாம்தான். முகம்மதியனாவது, கிறிஸ்தவனாவது, இந்துவாவது?

ஆத்மா எல்லாம் ஒன்றுதானே? குறுக்கே ஒன்றும் பேசாமல் கேள்...என்பேர் நரசிம்மன். திருநெல்வேலி ஜில்லாவிலே பாணுபுரம் என்கிற ஒரு சிற்றூரிலே நடுத்தர அந்தஸ்து உள்ள ஒரு குடும்பத்திலே பிறந்து வளர்ந்த நான் எனது 24வது வயதிலே வயிற்றுப் பிழைப்பை முன்னிட்டுக் கல்கத்தா சென்று குடியேறினேன். நான் அங்கு செல்லும்போது சொற்பமிருந்த சொத்து, பந்து மித்திரர் அனைவரையும் இழந்து உடுத்த துணிகளோடுதான் சென்றேன். அதற்குக் காரணங்கள் பல. அதையெல்லாம் விவரித்து பொழுதை வீண்செய்ய எனக்கிஷ்டமில்லை.

பிரம்மசாரியாகக் கல்கத்தா சென்ற நான் மறு வருஷத்தில் கிருஹஸ்தனானேன். அதற்கடுத்த வருஷத்தில் தந்தையுமானேன். அவள்-என் கிருஹலக்ஷ்மி-சொர்ணவிக்ரஹம் போன்ற ஒரு பெண் மகவை ஈன்று என்னிடம் ஒப்படைத்துக் கண்ணை மூடினாள். அவளது ரூபலாவண்ய சௌந்தர்ய குண விசேஷாதிகளால் நிரம்பியுள்ள என் உள்ளத்தில்—உலக சம்பிரதாயப்படி உள்ள களத்திரம் என்கிற—இரண்டாம் தாரத்திற்கு ஊசி முனைகூட இடமேயில்லை. குழந்தை வளர வளர எனது பிரதிக்ஞை அசைக்க முடியாத வகையில் வேரோடிப் போயிற்று. குழந்தையை நானே வளர்த்தேன்.

நான் வேலை பார்த்தது ஒரு மார்வாரியிடம். அவர் மிகவும் நல்லவர். சென்னையிலுள்ள அவரது கிளைக் காரியாலயத்தை நிர்வாகம் செய்து வந்த ஜகன் மோஹன்...!....ஜகன்....மோ...ஹ...ன்!

இந்த இடத்தில் அவர் தன்னை மறந்து பற்களை நறநறவென்று கடித்தார். திடீரென அவரது கண்கள் நெருப்புத் துண்டுகளைப் போலச் சிவந்தன. நான் மௌனமாக அவரை நோக்கிக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப்பின் ஓரளவு ஆசுவாசம் கொண்டு மேலே சொன்னார்.

".......ஜகன்மோஹன் மார்வாரியின் தமையன் மகன். மார்வாரிக்கு ஸந்ததி கிடையாது. ஆகையால் மார்வாரியின் திரண்ட செல்வத்திற்கு வாரிசான மோஹன் பல வருடங்களுக்குப்பின் கல்கத்தாவுக்கு - சிற்றப்பாவிடம் சீராட வந்தான். மார்வாரி வீட்டுக்கு நேர் எதிர் வீட்டில்தான் - அந்த வீடும் அவருடையதே - நான் என் குழந்தையுடன் வசித்து வந்தேன்.

மோஹனுக்கு வயது இருபத்துநான்கு. மாலாவின் வயது பதினாறு. யௌவன உணர்ச்சி காட்டாற்று வெள்ளம்போன்றதல்லவா ? ரூபத்தில் சிறந்த இருவரும் பரஸ்பரம் உள்ளத்தைப் பறிகொடுத்தனர். நான் சொன்னேன் : 'அம்மா, அவன் ஒரு லக்ஷாதிகாரி, நாமோ பிக்ஷாதிகாரி. உங்கள் நட்பு'...என நான் சொல்லத் தொடங்கும்போதே, அவள் என் வாய்க்குப் பூட்டிட்டுவிட்டாள். 'அப்பா, மோஹனின் குணத்தை நன்குணர்ந்த நீங்கள் கூட இப்படி ஆட்சேபிக்கலாமா ? அவர் என்னைப் பஹிரங்க மணம் புரிந்து ஸஹதர்மிணியாக்கிக் கொள்வதாக அவர்களின் குலதெய்வமாகிய காளிகாதேவிமீது ஆணையிட்டுள்ளார்' என்றாள். காமத்திற்குக் கண்ணில்லை, காதலுக்குக் கட்டில்லை. ஏதோ உணர்ச்சி வேகத்தில் ஆயிரம் சத்தியம் செய்வதுதான். எல்லாம் அநுஷ்டானத்தில் வருமா ? என்பது எனக்குச் சந்தேகம்தான். மோஹனிடமே இது சம்பந்தமாக நேரில் உரையாடினேன். மாலா கூறியதுபோல் அவன் ஆணித்தரமாகத்தான் பேசினான். எனக்கு எப்போதுமே ஜாதி, மதம் முதலியவைகளில் - அவைகளின் வெளிப் பூசல்களிலே நம்பிக்கை கிடையாது. சரி, இருவரும் மனமொத்துப் போகும் விஷயத்தில் நாம் ஏன் கோட்டான்போல் குறுக்கிடவேண்டும் ? என எண்ணிப் பேசாமலிருந்துவிட்டேன்.

மாலா - மோஹன் நட்பு வளர்ந்தது. அவன் ஐந்து மாத காலம் கல்கத்தாவில் தங்கியிருந்தான். அந்த ஐந்து மாதங்களில் ஐந்து விநாடியாவது அவர்கள் தனித்திருந்திருப்பார்களா, என்பது சந்தேகம்தான். அப்படி அவர்கள் கூடிக்

குலவினதின்பயன்...மாலாவுக்கு அன்னையின் சின்னங்கள் ஏற்பட்டதுதான். பிறகுதான் எங்கள் கண்கள் திறந்தன. இந்நிலையில் தன்தாய்க்கு உடல்நிலைச் சீர்கேடெனத் தந்திவந்திருப்பதாகக் கூறிச் சென்னை சென்றுன் மோஹன். நாட்கள் மாத ரூபத்தில் மாறின.

* * * *

ஒருநாள் மார்வாரி வீட்டில் பரபரப்புக் காணப்பட்டது. விசாரித்ததில் மோஹனுக்குக் கலியாணம் நடைபெறப் போவதாகத் தகவல் கிடைத்தது. தகவல் உண்மைதான் என ஊர்ஜிதமான போது என்னருமைக் குழந்தையும் நானும் துயரக்கடலில் மூழ்குவது தவிர செய்வகையொன்றும் புலப்படாமலிருந்தது. அழுதழுது முகம் சிவந்து வீங்கிய கர்ப்பிணியைப் பார்த்துப் பார்த்து என் இதயம் எந்த நிமிஷமும் 'படீர்' என்று வெடித்துவிடும் போலிருந்தது.

கல்கத்தா நகரத்தையடுத்த நாலு மைல் தூரத்திலுள்ள 'சேரமா' என்கிற இடத்தில்தான் திருமணம். என்னையும் அழைத்திருந்தார் மார்வாரி. நான் மாலாவுக்கு முடிந்த வரையில் தைரியத்தை யூட்டிவிட்டுச் சேரமா சென்றேன். மோஹன் என்னிடம் முன் பின் அறிமுகமில்லாதவன்போல் நடந்து கொண்டது என் நெஞ்சைப் பிளந்தது. பொறுமையை வலிய வரவழைத்துக் கொண்டு, அவனைத் தனிமையில் சந்தித்துப் பேசினேன். அவன் எனக்கு 'ஏதாவது' தருவதாகக் கூறினன். அப்போது என் கையில் கத்தியில்லாமற் போனது அவன் அதிர்ஷ்டம்தான். பிறகு பெரிய மனிதர் கூடியிருந்த சபையில் இதைப் பிரஸ்தாபித்து, 'இந்தக் கலியாணத்தை நிறுத்தவேண்டும். என் மகளை மோஹன் மணக்கவேண்டும்' என நியாயம் கோரினேன். நான் வேலை பார்க்கும் அறிவாளியான மார்வாரி ஒருவர் தவிர ஏனையோர் என்னை ஒரு பைத்தியமாகக் கருதிப் பரிகசித்தனர். மார்வாரி மோஹனை யழைத்து விசாரித்தார். ஆ! அந்தப் பாவி, தான் ஒன்றுமே அறியேனெனக் காளி மீது சத்தியம் பல செய்தான். அறிவாளியாவது மண்ணாங்கட்டியாவது? மார்வாரியும் இப்படித்தான் சொன்னர்: "...நீ சொல்வதும் ஓரளவு உண்மையாக இருக்கலாம். ஆனல் தாரதரம் பாராமல் இருவரையும் நெருங்கவிட்டது உன் பிசகு. உனக்கு வேண்டுமானல் ஏதாவது...." என்றார். எய்தவனிருக்க அம்பை நோவதில் பயனென்ன? அந்தத் துரோகியை.........

மனம் நிலைகொள்ளாது தவித்தது. பைத்தியமே பிடித்துவிட்டது என்று சொல்லலாம். உத்தேசமே இல்லாமல் இங்குமங்கும் சுற்றிக்கொண்டிருந்தேன். அப்படிச் சுற்றின இடங்களில் சமையற்கட்டும் ஒன்று. அங்கே ஒரு சாமானின் மீது என் நாட்டம் விழுந்தது. யாருமறியாத சமயம் பார்த்து அதைக் களவாடினேன். அடுத்த நிமிஷம் என் மனக் கண்முன் தோற்றமளித்தது மோஹனின் சவக்கோலம்தான். அதன் பிறகு நானெங்கும் நடமாடவேயில்லை. ஒரு முடிவின்கீழ், ஒரு மரத்தடியில் சென்றமர்ந்தேன்.

'ஜே ஜே' என்று கலியாணம்! விருந்து! விதவிதமான ஆடையாபரண அலங்காரங்களுடன் ஜனங்களின் நடமாட்டம்! தூரத்திலிருந்து இதையெல்லாம் கண்டு என் உள்ளம் ஏளனமாக நகைத்தது. என் கருத்தெல்லாம் எனக்குதவி புரியும் துணைவனை அந்த காலதேவனின் வருகையில்தான். பொழுதும் மெல்ல மெல்லச் சாய்ந்தது. இருள் கவிந்தது.

இரவு சரியாகப் பன்னிரண்டு மணியிருக்கும். மூன்றும் மாடியில் மோஹன் சயனித்திருக்கும் அறையில் பதுங்கிப் பதுங்கி நுழைந்த நான் அங்கே கண்ட பயங்கரக் காட்சியால் மருண்டே போனேன். முகமூடி யுருவமொன்று மோஹனின் மார்பிலிருந்து கத்தியை எடுத்து நிதானமாகத் தன் உடைக்குள் நுழைத்துக்கொண்டிருந்தது. அது யார்? ஆணு பெண்ணு என்று நிதானிப்பதற்குள் அவ்வுருவம் அருகிலிருந்த கதவைத் திறந்துகொண்டு அப்பாற்

சென்று மறைந்துவிட்டது. அதற்கு மேலும் எனக்கங்கே என்ன வேலை? மாடியிலிருந்து நிதானமாகக் கீழே வந்து பங்களாவைக்கடந்து வெளியே வந்தேன். மோஹன், முடிந்தான். எந்த வகையிலோ என் எண்ணம் ஈடேறிவிட்டது. அப்பொழுதும் கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்த, சமையற்கட்டிலிருந்தெடுத்த கத்தியைத் தூர வீசியெறிந்தேன். மேற்கொண்டு?- மாலாவின் நினைவு. பாவம்; குழந்தை தனிமையில் எப்படித் தவித்துப் புழுப்போல் துடிக்கிறாளோ! வீட்டை நோக்கி ஓட்டமாக ஓடினேன்.

முதல்நாள் சரியான ஆகாரமில்லை. அன்று சுத்தப் பட்டினி. மனதில் கலவரம்-கவலை-ஏதோ பெருத்த குழப்பம். ஓடச் சக்தி எப்படியிருக்கும்? இருட்டில் புதுவழியில் பல இடங்களில் விழுந்து எழுந்தேன். எத்தனையோ காயங்கள். அதையெல்லாம் லட்சியம் செய்து தடவிக்கொடுத்துக்கொண்டு உட்கார்ந்திருக்க அதுவா சமயம்? ஓடினேன். மேலும் மேலும் ஓடினேன்.

வீடு திறந்து கிடந்தது. அதைப் பார்த்ததுமே என் மனம் பகீர் என்றது. உள்ளே விளக்கில்லை. 'மாலா! மாலா!' என்று உரக்கக் கூவினேன். பதிலேயில்லை. தட்டித்தடுமாறி எப்படியோ விளக்கைப் பொருத்தினேன். எல்லா அறைகளும் திறந்தே கிடந்தன. மாலா இல்லை. அவளறையில் படுக்கையின்மீது கிடந்த துண்டுக்கடிதம் பேசிற்று: "அப்பா! 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்பது இப்போது-கண் அவிந்தபின் - தெரிந்தது. மாலைக்குள் நீங்கள் திரும்பாததிலிருந்தே என் பங்கு தோல்விதான்என்பதுதெரிந்துவிட்டது. மார்வாரி வீட்டுச் சிப்பந்திகளில் கலியாணத்திலிருந்து அவசரமாகத் திரும்பிய சிலர் பேசிக்கொண்டதிலிருந்து கலியாணம் பூர்த்திபெற்றதாக அறிந்தேன். இனி எனக்குப் பூமியில் வேலையில்லை. மீதி நாட்களைக் கொடிய நாட்களாகக் கழிப்பதைவிட, தங்களுக்கு மனக்கஷ்டத்தையும் அபகீர்த்தியையும் விளைத்துக் கொண்டிருப்பதைவிட இறப்பதே மேல் என்கிற முடிவுகொண்டேன். உலகில் தங்களைப் போன்ற தந்தை எவருக்கும் கிடைப்பதரிது. வருகிற ஜன்மாக்களிலும் நான் தங்களுக்கே மகளாகப் பிறக்கவேண்டும்; ஆனால் நானும் சீர்கெட்டுத் தங்கள் மனதையும் புண்படுத்தும் மாலாவாக மட்டும் பிறக்கக்கூடாது' என்கிற ஒரே அவாவோடு நான் சாகச் செல்கிறேன். என்னை நினைந்து உருகாதீர்கள். மீதி நாட்களைப் பகவத்தியானத்தில் கழித்து சொர்க்கத்திற்கு வாருங்கள். நானங்கே தங்களை வரவேற்பேன். விடைபெற்றுக் கொள்கிறேன்."

"மாலா!—" என்று வீறிட்டலறினேன். மண்டையில் ஓங்கி அறைந்துகொண்டு நிலத்தில் வீழ்ந்தேன். துடித்தேன். புலம்பினேன்.

சட்டென்று ஏதோ நினைவு. அங்கே சில தீக்குச்சிகள் கீழே கிடந்ததும், கடிதத்தில் மை-நான் படித்தபோது - அவ்வளவாக உலராமலிருந்ததும் அவள் இருட்டின பின்னர்தான் கடிதத்தை-விளக்கொளியில் எழுதியிருக்கவேண்டும், சமீபத்தில்தான் வெளியே சென்றிருக்கவேண்டும் என்கிற ஊகங்களை உண்டுபண்ணின. எங்கேதான் சென்றிருப்பாள்?.......சந்திரபாகா நதி நினைவுக்கு வந்தது. பாவி வீணாகப் பொழுதைக் கழித்தேனே என்று நொந்துகொண்டு நதியை நோக்கி ஓடினேன். இருளில் எதுவுமே புலப்படவில்லை. ஒரு மைல் தூரத்திலுள்ள நதிக்கரையை வெகு சீக்கிரத்திலடைந்தேன்.

அதோ......! அதோ......ஒரு நிழலாட்டம். ஆம்; அது நம் மாலாவாகத்தானிருக்கவேண்டும். 'மாலா!—' எனக் கூவினேன். நதிக்கரையைச் சமீபித்துவிட்ட அந்த உருவம்-மாலாதான்-என்னிய குரலைக் கேட்டு ஒரு நிமிஷம் திகைத்து நின்றது. அப்போது அவள் மனம் என்ன பாடுதான் பட்டதோ! எப்படித்தான் அந்தத் துணிவை உண்டுபண்ணிக்கொண்டாளோ! பொத்தென்று நதியில் வீழ்ந்துவிட்டாள். ஐயோ!

என் கண்மணி அப்படி விழும்போது ‘அப்பா !’ என்று கூவியது ஈனஸ்வரத்தில் காற்றோசையில் கலந்து என் காதுகளில் விழ்ந்தது.

நானும் நதியில் குதித்தேன், தேடினேன். அவளை உயிருடனும் காண முடியவில்லை ; உயிரற்ற கட்டையாகவும் காணமுடியவில்லை. அந்தப் பாழும் நதிக்கு என்னைப் பிடிக்கவில்லை. என் விதி மாளவில்லை.

நான் கரையேறியபோது பொழுது புலரும் தறுவாயிலிருந்ததாக ஞாபகம். பிறகொன்றும் எனக்குத் தெரியாது. கண்விழித்தபோது வயது சென்ற பட்டாணி தம்பதிகளின் முன் ஒரு குடிசையிலிருப்பது தெரிந்தது. சித்தம் சுவாதீனத்திலில்லை. என்னென்ன செய்தேனோ, எங்கெங்கு சென்றேனோ, என்னையறியாமலே சஞ்சாரம் செய்துகொண்டு இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன். அதோ அந்த வீட்டின் மாடியில் ஒரு நாள் ஒரு பெண் உலவிக்கொண்டிருந்தாள். மாலாவைப் போன்ற தோற்றம். என் மூளை ஒருதரம் சுழன்றது. கொஞ்சம் கொஞ்சமாகப் பழைய சிந்தனைகள். பிறகுதான் உலக விவகாரங்கள் மனக்கண்ணில் புலனாயிற்று. அந்தப் பெண்ணும் சிறிது காலத்தில் காணப்படவில்லை. வேறு ஊருக்குச் சென்றுவிட்டாள் போலிருக்கிறது. அன்றுமுதல் இன்றுவரை நான் இந்த ஆற்றங்கரையையே நிரந்தர வாசஸ்தலமாகக்கொண்டேன். பசித்தபோது பிச்சையெடுத்து உண்பேன். மீதிப்போது - மழையானாலும் வெய்யிலானாலும் இங்கே கிடப்பேன்—இது தானப்பா என் கதை” என்று முடித்தாரந்தப் பக்கிரித் தோற்றத்தில் விளங்கிய நரசிம்மன்.

* * * * *

அதுவரை நான் மூச்சுவிட்டேனா இல்லையா என்பது எனக்கே சந்தேகம் தான். அவரை என்னோடு வந்து என்னுடனேயே வசிக்கும்படி வேண்டினேன். மறுத்தார். பணம் கொடுத்தேன். வாங்க முடியாதென்றார். நான் பார்த்துக்கொண்டிருக்கும் போதே எழுந்து நடந்துசென்றார்-என்னை லட்சியம் செய்யாமல். உண்மையில் எனக்குத்தான் பைத்தியம் பிடித்தாற்போலிருந்தது. உலக நிலையை நினைந்து வெகுநேரம் அசைவற்று அங்கேயே உட்கார்ந்திருந்த என்னை மழை வந்து கிளப்பிவிட்டது. என் வழியே சென்றேன்.

நாளைக்கும் நீங்கள் மாயவரம் சென்றால் நரசிம்மனைக் காணக்கூடும். “ஓரணாக் காசு இருந்தாக் கொடுங்க ஸாமீ, ஒரு இட்லி வாங்கி ஸாப்பிட்றேன்—” என்கிற பல்லவியை அவர் இன்னமும் விடவில்லை. ஆனால் இந்த விருத்தாந்தத்தை மட்டும் அவரிடம் கேட்க வேண்டாம். பாவம் ; நொந்த உள்ளத்தைக் கிளறிவிடுவானேன் ?

திட்டமான விவசாயம்

பி. கோதண்டராமன்

வாழ்க்கையின் எத்துறையை எடுத்துக்கொண்டாலும், நாம் மேற்கொள்ளும் ஒரு காரியம் வெற்றியடைய வேண்டுமானல் அதற்கொரு திட்டம் வகுக்கப் பட வேண்டும். நமது குறிக்கோள் என்ன? அதை அடைவதற்கு என்னென்ன சாதனங்கள் தேவை? நம்மிடமுள்ள சாதனங்கள் யாவை? அவற்றைத் திரட்டி வெற்றியுறப் பிரயோகிக்க நாம் செய்ய வேண்டுவன யாவை? குறித்த காலத்திற்குள் நம் குறிக்கோள் நிறைவேறுவதற்கு நாம் என்னென்ன செய்ய வேண்டும்? இவற்றையெல்லாம் ஆராய்ந்து வழிமுறையை வகுப்பதே திட்டம். இக்காலத்தில் திட்டமின்றி எக்காரியமும் சித்தியடையாது.

நம் நாட்டில் இந்நூற்றுண்டு முதற்கொண்டே உணவு சப்ளை குறைந்து வருகின்றது. ஜனத்தொகையோ வேகமாகப் பெருகி வருகின்றது. யுத்த காலத்திலும் அதற்குப் பிறகும் "உணவைப் பெருக்குக" என்ற பிரசாரத்தின் பயனுகச் சாகுபடியாகக்கூடிய நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டும், உணவு சப்ளை என்னவோ ஜனத்தொகையின் தேவைக்குப் போதவில்லை. மக்களில் சற்றேறக்குறைய மூன்றில் ஒரு பகுதியினருக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை. நிரந்தரமாகவே போதிய ஊட்டமில்லாத அவர்கள் உடல் நலம் குன்றி நடைபிணங்களாக உள்ளனர். இந்தச் சீர் கேடான நிலைமையைச் சீர் திருத்தத் திட்டமொன்று வேண்டாமா?

நாம் தொழிலபிவிருத்தியைப் பற்றிப் பேசிவருகிறோம். தொழிலுக்குரிய மூலப் பொருள்கள் ஏராளமாக வேண்டியிருக்கின்றன. தொழிலுக்குரிய இயந்திர சாதனங்களைப் பெற நாம் நம் மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டும். ஆகவே, உணவுப் பொருள்களுடன் மூலப் பொருள்களையும் விவசாயி உற்பத்தி செய்ய வேண்டும். தொழிலுக்கும் ஏற்றுமதி வியாபாரத்திற்கும் உரிய மூலப்பொருள்களுக்குக் கைமேல் காசு கிடைத்துவிடுவதால், விவசாயி உணவுப் பொருள்கள் உற்பத்தியில் அசட்டையாயிருந்து வியாபாரப் பயிர்கள் விஷயத்திலேயே அதிக அக்கறை காட்டுவது இயல்பு. இதைத் தடுக்கவும் உணவுப் பொருள்கள் உற்பத்தியையும் தொழில் வியாபார மூலப் பொருள்கள் உற்பத்தியையும் தேவைக்குத் தக்கபடி சரிக் கட்டவும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் திட்டமொன்று வேண்டாமா? ஆண்டு ஒன்றுக்கு உணவுப் பொருள்கள் இவ்வளவு விளைந்தாக வேண்டும், வியாபார மூலப் பொருள்கள் இவ்வளவு விளைந்தாக வேண்டும். என்று கணக்குப் போட்டு, அதை உற்பத்தி செய்ய ஏற்பாடொன்று செய்ய வேண்டாமா?

ஆண்டுதோறும் இவ்வளவு உற்பத்தியாக வேண்டும் என்று நிர்ணயமானபின், உற்பத்தியை அதிகரிப்பதற்கான சில காரிங்களை அரசாங்கத்தார் உடனே செய்ய வேண்டும். விவசாயி கருத்துடன் பயிர் வேலையில் முனையவும், அதிக நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வரவும், விவசாயப் பொருள்களின் விலைவாசியை அவனுக்கு அனுகூலமாகத் திட்டம் செய்ய வேண்டும். விவசாயம் லாபகரமான தொழிலானல் தான் விவசாயிக்கு உற்பத்தி வேலையில் முனையத் தூண்டுதல் ஏற்படும். உலக நிலை காரணமாக விவசாயப் பொருள்களின் விலை ஏறுவதும் இறங்குவதுமாக

இருந்தால் அவனுக்கு நிம்மதியிராது. அவனுக்கு லாபகரமாயிருக்கும் ஒரு மட்டத்திற்கு விலைவாசிகளைக் கொண்டு வந்து அதை நிலைநிறுத்த வேண்டும்.

பயிரிடும் குடியானவனுக்குத் தன் தொழிலில் ஊக்க மேற்பட வேண்டுமானால், நிலச்சுவான்தாரின் கொடுங்கோலுக்கு ஆளாகாமல் அவனது நில உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நிலம் பயிரிடுவோனுக்கே சொந்தம் என்பது ஏற்படக்கூடுமானால், மிகவும் விசேஷம்.

விவசாயிக்கு நிலத்தை அபிவிருத்தி செய்யவும், உற்பத்தியைப் பெருக்கவும் போதிய பணவசதி இன்றியமையாததாகும். அவனுக்குக் குறுகிய காலத்துக் கடனும் நீண்ட காலத்துக் கடனும் சொற்ப வட்டிக்குத் தாராளமாகக் கிடைக்க வேண்டும். இதுகாறும் பாங்கிகளேனும், கூட்டுறவுச் சங்கங்களேனும் இவ்வழியில் அவனுக்குப் போதிய உதவியளிக்கவில்லை. அரசாங்கம் அவன் தேவையை ஆராய்ந்து உடனே ஆவன செய்ய வேண்டும்.

நம் நாட்டிலே நம் அடிப்படைத் தொழில் விவசாயந்தான். ஏழு லட்சம் கிராமங்களில் நடைபெறும் முக்கியத் தொழில் அதுவே. ஆயினும், போதிய உணவையோ, அல்லது ஊட்டமளிக்கும் சத்துள்ள உணவையோ நாம் உற்பத்தி செய்யாதிருக்கிறோம். ஆரோக்கிய வாழ்க்கைக்கு இன்றியமையாத சத்துள்ள உணவு இதுவென உணவு சாஸ்திரிகள் திட்டம் போட்டுள்ளனர். ஆள் ஒன்றுக்கு இவ்வளவு அரிசி, பருப்பு, காய்கறி, எண்ணெய், கொழுப்பு, பழம், பால், சர்க்கரை தேவையெனக் கணக்கிட்டுள்ளனர். முப்பது கோடி இந்திய மக்களுக்கு ஒவ்வொரு வகையிலும் இவ்வளவு வேண்டுமெனக் கணக்கிட்டு அதை உற்பத்தி செய்ய உடனே திட்டம் போட்டு அதை நிறைவேற்றுவதில் முனைய வேண்டும்.

விவசாய உற்பத்தியை இரண்டு வழியில் அதிகரிக்கலாம். சாகுபடியாகக் கூடிய நிலத்தையெல்லாம் சாகுபடிக்குள் கொண்டுவருவது ஒரு வழி. சாகுபடியாகக் கூடிய நிலம் யாவும் சற்றேறக்குறைய சாகுபடிக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதென்றும், இனி அதிக நிலம் கிடையாதென்றும் கூறுகின்றனர். ஆயினும், நவீன இயந்திர சாதனங்கள் மூலமாக இன்னும் எவ்வளவோ நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வரக்கூடும். அரசாங்கம் இவ்விஷயத்தை ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டும். அரசாங்க விவசாய இலாகாவின் ஒரு வேலை ஒவ்வொரு பிரதேசத்திலும், எந்தெந்த நிலப்பரப்பை விவசாயத்திற்கு லாயக்காக்கலாம் என ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதாகும். விவசாய இலாகா, காட்டிலாகா, நில இலாகா ஆகிய இலாகாக்களுடன் கலந்து இவ் விஷயத்தில் கவனஞ் செலுத்த வேண்டும்.

சீர்திருத்திய வேளாண்மை மூலம், உள்ள நிலத்தில் உற்பத்தியைப் பெருக்குவது மற்றொரு வழியாகும். உலகிலேயே நம் நாட்டில்தான் உற்பத்தி குறைவு. ஏன் இங்ஙனமிருக்க வேண்டும்? மக்களின் அறியாமையும், அரசாங்கத்தின் அசிரத்தையுந்தான் காரணம். மக்களின் அறியாமையைப் போக்க நாடெங்கும் விவசாயக் கல்வி பரவ வேண்டும். அநாதிகாலமாக இந்நாட்டு மக்கள் பெற்றுள்ள அனுபவ அறிவுடன் இக்கால விஞ்ஞான அறிவையும் மக்கள் பெற வசதிகள் செய்யவேண்டும். பெரிய பொருட் செலவில் அரசாங்கம் நடத்தும் விவசாய விஞ்ஞான ஆராய்ச்சியும், சோதனைப் பண்ணைகளும் பலனளிக்க வேண்டுமானால், அவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் நலன்களைச் சாமானிய மக்களும் அறியும் வண்ணம் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், நவீன விவசாய முறைகளைப் பயின்ற அரசாங்க உத்தியோகஸ்தன் ஒருவனும், விவசாயிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய கமிட்டியொன்று நியமிக்கப்பட்டு, அக் கமிட்டி குறிப்பிட்ட காலத்திற்குள் கிராம விவசாயத்தில் ஒரு குறிப்பிட்ட அபிவிருத்

தியை ஏற்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும். நாடெங்கும் புதுவகையான உயர்ந்த ஜாதிப் பயிர்களும், நல்ல ஜாதி விதைகளும் வழங்க ஏற்பாடாக வேண்டும். புஷ்டியுள்ள உணவு தானியங்களே பயிர் செய்யப்பட வேண்டும். உள்ளூர் தேவையையும் நாட்டின் தேவையையும் அனுசரித்து அவை பயிராக வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வளவு ஆண்டுதோறும் உற்பத்தியாகின்றன என்ற புள்ளி விவரம் சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், மண்ணின் இயல்பையும், செழுமையையும் அறிந்து அதற்குகந்த முறையில் விவசாயம் நடத்த ஏற்பாடாக வேண்டும். பூசார நிலையை அறிந்து அதற்குத் தக்கபடி எருவிட வேண்டும். மாட்டெரு, தோட்ட, வீட்டுக் குப்பை எரு, பசுந்தாள் உரம், ஆகியவற்றுடன் செயற்கை எருவும் குறித்த அளவு சேர்க்கப்பட வேண்டும். எரு விஷயமாக விவசாயிகளுக்கு ஆலோசனை கூற அரசாங்க அதிகாரி யொருவன் எப்போதும் தயாராக இருக்கவேண்டும். நல்ல எருவும் சொற்ப விலையில் கிடைக்க ஏற்பாடாக வேண்டும். நாடெங்கும் நீர்ப்பாசன வசதிகள் அமைக்கப்பட வேண்டும். மழை பெய்யாத காரணத்தினல் பஞ்சமேற்படும் நிலைமை அடியோடு ஒழிய வேண்டும். இவை யாவும் குறித்த காலத்தில் நிறைவேற்ற திட்டமொன்று போட்டு அதை உத்சாகமுடன் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

இன்றுள்ள விவசாய இலாகா சரியாக வேலை செய்யவில்லை. என்பது தெளிவு. விவசாய இலாகா மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளாமலிருப்பதே காரணம். விவசாய விஞ்ஞானத்தில் பயிற்சி பெற்றவரும், விவசாய அனுபவமுடையவருமான மேற்பார்வையாளர் சென்னை மாகாணத்தில் 20,000 பேர் வேண்டும். இவர்கள் கிராமந்தோறும் சுற்றுப் பிரயாணம் செய்து (கிராம நிலையையும்) கிராம மக்களின் நிலையையும் அறிந்து மந்திப அதிகாரிகளுக்கு அறிக்கை விடவேண்டும். அன்றியும் கிராம விவசாயிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து விவசாய அபிவிருத்திக்கான வழிகளைக் காட்டுவதுடன், தேவையான உதவிக்கு அரசாங்கத்திடம் சிபார்சு செய்ய வேண்டும். அரசாங்கம் கடன் வாங்கிப் பல கோடி ரூபாய் விவசாயத்திற்கென இங்ஙனம் செலவழித்தால், 5 வருஷங்களுள் நம் விவசாயத்தைச் சீர்படுத்தலாம்.

யுத்த காலத்தில் பிரிட்டனில் அரசாங்கம் அற்புதமான வேலைகள் செய்து விவசாயத்தை ஜீவத் தொழிலாக்கியது. விவசாய உற்பத்தியை 70 சதம் பெருக்கியது. அமெரிக்காவில் பூமியின் வளத்தைக் காப்பாற்றவும் விவசாயிகளுடன் கலந்து ஆலோசித்து விவசாயப் உற்பத்தியைப் பெருக்கவும் நாடெங்கும் கிளை ஸ்தாபனங்கள் உள்ள மகத்தான விவசாய இலாகா அற்புதமாக வேலை செய்து வருகிறது. இந்தியாவில் நாமும் ஏன் விவசாய அபிவிருத்திக்காகப் பெரு முயற்சிகள் செய்யலாகாது ?

வேண்டியது உறுதி. இந்த நிர்க்கதியான நிலை ஒழிய வேண்டுமென மக்களும் அரசாங்கமும் உறுதிகொள்ள வேண்டும். ஒரு பக்கம் விவசாயப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும். உதாரணமாக, நிலச்சுவான்தார்கள் குடியானவரைச் சுரண்டுவது நிற்க வழிதேட வேண்டும். கூடிய வரையில் பயிரிடுவோனுக்கே நில உரிமை வழங்க வேண்டும். விவசாயத் தொழிலாளிக்கும் குறைந்த பட்சக் கூலி நிர்ணயமாக வேண்டும். கடன் வசதி அளிக்க வேண்டும். நீர்ப்பாசனம் தாராளமாக இருக்க வேண்டும். மற்றொரு பக்கம் நவீன விஞ்ஞான முறைகளை மக்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அரசாங்கம் ஏராளமான விவசாயத் தொண்டர்களுக்குப் பயிற்சியளித்து கிராமங்கள் தோறும் அவர்களை அனுப்பி விவசாயிகளுக்கு உதவுமாறு செய்ய வேண்டும். ஐந்துவருடத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். உடனே அதை நிறைவேற்றுவதற்கான காரியத்தில் புக வேண்டும்.

திவ்வியப் பிரபந்தம்

வே. நாராயணன்

மக்களைப் பாதுகாப்பதற்காக மகாவிஷ்ணு புதிதாக எடுத்த பத்து அவதாரங்களோ என்று அதிசயிக்கும்படியான பெருமை வாய்ந்தவர்கள், ஆழ்வார்கள் பதின்மரும். இவர்களுள் தலை சிறந்தவர் நம்மாழ்வார் என்று கொண்டாடப் படுகின்ற சடகோப முனிவர். இவர் அருளிச்செய்த பிரபந்தங்கள் திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திருவாய்மொழி என்று நான்கு. இந்த நான்கு பிரபந்தங்களும் அந்தாதியாக அமைந்தவை.

"கண்டு கொண்டு என்னை சரிமாறப் பிரான், பண்டை வல்வினை பாற்றியருளினான்; எண்திசையும் அறிய இயம்புகேன் ஒண்தமிழ்ச் சடகோபன் அருளையே" என்றார் மதுரகவி என்னும் பெரியார். அதனாலேயே அவரும் பதினொன்றாவது ஆழ்வாராகக் கொள்ளப் பெற்றார்.

திருமாலைப் பாடிய பெண்மணி ஒருத்தியும் ஆழ்வார்களின் தொகையிலே வைத்து எண்ணப்படுகிறாள். அவள்தான் பெரியாழ்வார் பெற்றெடுத்த கோதை நாச்சியார். இவளையே ஆண்டாள் என்று திருமால் அடியார்கள் கொண்டாடுவார்கள்.

இப்பன்னிரண்டு பெரியார்களும் தெய்வப்புலமை வாய்ந்தவர்கள்; திருமாலையல்லாது மற்றொரு தெய்வத்தைத் தொழாதவர்கள்; திருமாலால் "மயர்வறு மதிநலம்" அருளப் பெற்றவர்கள். இவர்கள் அருளிச் செய்த பிரபந்தங்கள் இருபத்து நான்கு. இவற்றுள் ஏறக்குறைய நாலாயிரம் பாடல்கள் உள்ளன. இவற்றைத் தொகுத்த தொகை நூலே, நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்னப்படுவது. நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழி இவற்றுள் மிகச் சிறந்தது. ஆகையால் நாலாயிரத்தையும் திருவாய்மொழி என்றே சொல்வதும் உண்டு.

இந்தப் பிரபந்தங்களைப்பற்றி ஆழ்வார்களே கூறியுள்ளதைக் கவனிப்போம். "என் நெஞ்சத்துள் இருந்து இங்கு இருந்தமிழ் நூல் இவை மொழிந்தான்" என்பர் நம்மாழ்வார். "என்சொல்லால் யான் சொன்ன இன்கவி என்பித்து தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்" என்பர். "அவன் என் முன் சொல்ல நான் சொன்னபடி இது" என்றும் கூறுவர். திருமால் முற்சந்தை சொல்ல, தாம் பிற் சந்தையாகக் கூறினாராம். இதுபற்றியே நம்மாழ்வார் பிரபந்தங்கள் நான்கையும் நான்கு வேதங்களாகவே கொள்ளும் மரபு எழுந்தது. வேதங்களைப்போலவே இவையும் அனாதி காலமாக இருந்து வந்து, திருமால் முன்னுருச்சொல்ல, நம்மாழ்வார் பின்னுருச் சொன்னதால், புதியகவிதைபோல வெளிவந்தன என்பது ஆன்றோர் கொள்கை. இது பற்றியே வேதத்தோடு திருவாய்மொழியும் வல்லவரை, "உபய வேதமும் உணர்ந்தோர்" என்று கொண்டாடுவதாயிற்று.

இப்படி ஆழ்வாரைக்கொண்டு, வேதத்தின் உட்பொருளைக் கேட்போர் நெஞ்சிலே நிற்கும்படி பாடியது திருமாலே என்றாலும், தம்மைக்கொண்டு பாடியதாலே ஆழ்வார் தம்முடைய இன்கவி என்று இப்பாடல்களைப் புகழ்ந்து

சுருங்கக் கூறின், அரசாங்கத்தின் திட்டம், அரசாங்கத்தின் பண உதவி, ஆலோசனை உதவி, மக்களின் ஊக்கம் இவை இன்றியமையாதன. உருப்படியான திட்டமும் அதன் நிறைவேற்றமுமே நம் விவசாயத்திற்குப் புத்துயிரளிக்கும்.

பெருமை கொள்கிறார்; தம்மை, "வாய் கொண்டு மானிடம் பாடவந்த கவியேன் அல்லேன்" என்று கூறிக் கொள்கிறார். "உலகம் படைத்தான் கவி ஆயினேற்கு மற்றோர் கவி ஏற்குமோ?" என்கிறார். "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்னேன்" என்கிறார். "வழிப்பட்டோட அருள் பெற்று மாயன்கோல மலரடிக்கீழ், சுழிபட்டு ஓடும் சுடர்ச்சோதி வெள்ளத்து இன்புற்று இருந்தாலும், இழிபட்டு ஓடும் உடலினில் பிறந்து, தன்சீர் யான் கற்று மொழிபட்டு ஓடும் கவியமுத நுகர்ச்சி உறுமோ முழுதுமே?" என்கிறார். திருவைகுந்தத்திலே, திருமாலின் திருவடி நீழலிலே, அருவிபோற் சோதி வெள்ளம் பாய்கின்ற திருமாமணி மண்டபத்திலே, அந்தமில் பேரின்பத்து அடியாரோடும் இன்புற்றிருப்பதைக் காட்டிலும், திருமாலின் சீர்களையும் சிறப்புகளையும் யாதும் கல்லாதவனைப் பிறங்கும், அவனுடைய அருள்கொண்டு ஆயிரம் இன் தமிழ் பாடித் தாமும் உண்டு பிறர்க்கும் அமுதூட்டும் ஆனந்தமே மிகப்பெரிது" என்கிறார்.

இவரைப்போலவே மற்ற ஆழ்வார்களும். பரமபதத்திலே பரமாத்மனைப் பல்லாண்டு பாடுகின்ற அடியார்களை ஒப்ப, திருமாலைப் பாடும் மனமுடைய பக்தர்களைக் கூவி அழைத்து, "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு" என்று பாடியவர் பெரியாழ்வார். இவர் பாடிய பிரபந்தங்கள் பெரியாழ்வார் திருமொழியும் திருப்பல்லாண்டும்.

ஆயருக்காகத் தான் கண்ட கனவினை "வாரணமாயிரம்" என்னும் பத்துப் பாடலாலே பாடி அவற்றைப் பாடுவோர்க்கும், கேட்கும் தம்பதிகளுக்குமே நன் மக்களைப் பெறச்செய்பவள், அப்பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்மணியான ஆண்டாள். இவள் பாடியவை நாச்சியார் திருமொழியும், திருப்பாவையும்.

"தூராத மனக்காதல் தொண்டர் தங்கள் குழாம் குழுமி திருப்புகழ்கள் பலவும்பாடி, போராழியம்மானைக்கண்டு, துள்ளிப் பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே" என்று ஆராத மனக்களிப்போடு திருமாலை ஏத்தியவர் குலசேகரப் பெருமாள்.

"இருக்குவாய் முனிக் கணங்கள் ஏத்த யானும் ஏத்தினேன்" என்று திருச்சந்த விருத்தப்பாடல்கள் நூற்றிருபதையும், "திருமாலே கவிக்கு நிறை பொருளாய் நின்றான்" என்று அவனுக்கே "நான்முகன் அந்தாதி"யையும் பாடியவர் திருமழிசைப்பிரான் என்னும் பெரியார்.

"அரங்கத்தம்மா! பள்ளி யெழுந்தருளாயே!" என்று திருப்பள்ளியெழுச்சியைப் பாடி "என் சொல், இளைய புன் கவிதையானாலும், இவற்றைக் கொண்டு தொடுத்த திருமாலையானது எம்பிரானுக்கு இனிதேயாகும்" என்று அரங்கனுக்கு மாலைசூட்டியவர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

அமலனை ஆதிப்பிரானைக் கண்ணாரக்கண்டு அடியே பிடித்து கண்வரையும் வருணித்துப் பாடிய திருப்பாணாழ்வார், "என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன் றினைக் காணாவே" என்கிறார்.

இன்கவி பாடும் பரமகவிகள் என்று, நம்மாழ்வாராலே போற்றப்பெற்ற முதலாழ்வார்களாகிய பூதத் தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் "நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்தேன்" என்றும், "யானே பெருந் தமிழன்" என்றும், "சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்றும், "நாள்தோறும் பாடிலும், நின் புகழே பாடுவன்" என்றும், நிறைவுடைய நாமங்கைதானும் நலம் புகழ வல்லளே, பூமங்கை கேள்வன் பொலிவு" என்றும், திருமாலை முற்றும் உணர்ந்து பாட இயலாது என்றாலும், அவனைப் பாடியல்லது தரிக்க மாட்டாத தங்கள் இயல்பை விளக்கியுள்ளார்கள்.

வேதங்களைப்போன்ற நான்கு பிரபந்தங்களை நம்மாழ்வார் பாடினார் என்றால், வேதாங்கங்களைப்போன்ற ஆறு பிரபந்தங்களைப் பாடியுள்ளார் அந்த நம்மாழ்வாரைத் திருவரங்கத்திற்கு எழுந்தருளப்

பண்ணி, அவர் முன்னிலையிலே பகற் பத்து, இராப்பத்து உற்சவங்களிலே திருவாய்மொழி முதலியவற்றைப் பாடு வித்த திருமங்கை மன்னர் என்னும் பெரியார். இவர் அருளிச்செய்த பிர பந்தங்கள் பெரிய திருமொழி, திருக் குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திரு வெழு கூற்றிருக்கை ஆகியவை.

"நற்பொருள் காண்மின், பாடி நீர் உய்ம்மின் நாராயணா என்னும் நாமம்" என்று தொண்டரைக்கூவி யழைத்து, "துஞ்சும்போது அழைமின்; துயர் வரில் நினைமின்; துயரிலீர்! சொல்லினும் நன்றாம்" என்றும், "நஞ்சுதான் கண் டீர் நம்முடைய வினைக்கு நாராயணா என் னும் நாமம்" என்றும் வற்புறுத்தியவர் இவரே. இமயமலையிலேயுள்ள திருப் பிரிதி முதற்கொண்டு, சேர நாட்டிலே யுள்ள திருநாவாய் ஈறாக உள்ள க்ஷேத் திரங்கள் பலவற்றையும் பாடியும், இராம கிருஷ்ணாதி அவதாரங்களிலே ஈடுபட் டும், நாயகிபாவத்தை மேற்கொண்டும், இவர்பாடிய பாடல்கள் இன்னிசையும் பக்திச் சுவையும் நிரம்பியவை.

இனி, ஆழ்வார்களின் பாடல்களில் சிலவற்றை எடுத்துக் காட்டுவேன்.

கார்கலந்த மேனியான்,
கைகலந்த ஆழியான்,
பார்கலந்த வல்வயிற்றான்,
பாம்பணையான்—சீர்கலந்த
சொல் நினைந்து போக்காரேல்
சூழ்வினையின் ஆழ்துயரை
என்நினைந்து போக்குவர் இப்போது

என்று "திருமாலின் பெருமைகளைப் பேசியே நம்முடைய துன்பங்களைப் போக்கிக்கொள்ள முடியும்" என்கிறார் நம்மாழ்வார்.

சங்கு, சக்கரம் அங்கையிற் கொண் டான் எங்கும் தானாய நங்கள் நாதனே என்று பாடி, 'எங்கும் நிறைந்த பரம் பொருளே நாம் வழிபடுவதற்காக சங்கு சக்கரதாரியாய்க் காட்சி யளிக்கிறான்' என்று அறிவுறுத்துகிறார். "மின்னின் நிலையில மன்னுயிர் ஆக்கைகள் என்னு மிடத்து இறை உன்னுமின் நீரே" என்றுகூறி "உயிர்கள் அழிவற்றவை; அவை மேற்கொள்ளும் உடல் வகை களோ க்ஷணப்பொழுது தோன்றி மறை கின்ற மின்னலைப்போல அழிபவை; ஆகையால் இவ்வுண்மையைச்சிறிதேனும் சிந்தனை செய்து கடைத்தேறுங்கள்" என்று உபதேசிப்பவரும் இவரே. தமக்கு உண்ணுஞ் சோறு, பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண் ணன் எம்பெருமான் ஆனதுபோல, நமக்கும் அவனேயாக வேண்டும் என்று இவர் போதிக்கிறார். ஆகையாலே தான் வைஷ்ணவர்கள் இவரை ஆழ்வார் கோஷ்டியிலும், ஆசார்ய கோஷ்டியிலும் வைத்துப் போற்றுகிறார்கள்.

பெரியாழ்வாரோ, தம்மை யசோதை யாகப் பாவித்துக்கொண்டு கண்ணபிரா னுக்குப் பிறந்த நாள் கொண்டாடியும், அவனைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி யும், அவனுடைய அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பரு வம், தளர் நடைப் பருவம், அச்சோப் பருவம் முதலியவற்றைப் பாடியும் புறம் புல்கவும், அப்பூச்சி காட்டவும், பாலுண் ணவும், நீராட்டவும், பூச்சூட்டவும், காப்பிடவும், காதுக் குத்தவும் அழைத் தும், "காக்காய், கண்ணனுக்குக் கோல் கொண்டு வா, கண்ணனைக் குழல் வார வா" என்று பாடியும், அவனுடைய திரு விளையாடல்களைக்கண்டு களிப்புற்றும், "இவனைக் கன்றின்பின் போக்கினேனே, பாவி" என்று மனமுறுகியும், காலிக் குப் பின்னே கண்ணன் வருவதையும், அவனைக்கண்டு கன்னிமார் காமுறுவதை யும் கண்டு இன்புற்றுப் பாடியுள்ள பாசுரங்கள் பிள்ளைத் தமிழிற்கு மூல பண்டாரமாய், பிள்ளைமை இன்பம் நிரம் பித் ததும்புவனவாக அமைந்துள்ளன. "அழகன் அலங்காரன் மலை"யை இவர் "குலமலை, கோலமலை, குளிர்மாமலை, கொற்றமலை, நிலமலை, நீண்டமலை திருமா லிருஞ் சோலையதே" என்பது கேட்போ ரின் நெஞ்சினை அள்ளுவதாகும். காலிக் குப் பின்னே வருகின்ற கடல்வண்ண னுடைய வேஷத்தைக் காணுமாறு

யசோதை தன்னுடைய தோழிகளை அழைத்துக் காட்டி "ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார், நங்கைமீர்! நானே, மற்று ஆரும்இல்லை" என்னும்போது, நாமும் பெரியாழ்வாரைப் போலவே கண்ணபிரானைப் புத்திரனாகப் பெற்று அக மகிழ்கிறோம்.

"செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ" என்றும், "சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக்கடவையோ கோவிந்தா!" என்றும், "பெண்ணின் வருத்தமறியாத பெருமான்" என்றும், "உள்ளே உருகி நைவேனை, உளளோ இலளோ என்னாத கொள்ளை கொள்ளிக் குறும்பன்" என்றும், "வீதியார வருவான்" என்றும் ஆணிச் சொற்களாலே அமைந்த ஆண்டாள் திருவாக்கு அழகுடையதாக விளங்குகின்றது.

குலசேகரப் பெருமானின் உறுதிப்பாடு தான் என்ன? "அரங்கனுக்கு அடியார்களாகி அவனுக்கே பித்தராமவர் பித்தரல்லர்கள்; மற்றையார் முற்றும் பித்தரே" என்பர்; மீண்டும், "பேயரே எனக்கு யாவரும், யானும் ஓர் பேயனே எவர்க்கும்; இதுபேசி என்?" என்பர். எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனும் ஆவேனே" என்பர். "நீகொண்டு ஆளாய் ஆகிலும் உன் குரைகழலே கூறுவன்" என்பர். "எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால் பருகுவோம் இன்னமுதை மதியோம்" என்று தருக்கிப் பேசுவர்.

திருமங்கை மன்னரோ, "கறவா மடநாகு கன்றுள்ளினாற்போல், மறவாது அடியேன் உன்னையே அழைக்கின்றேன்" என்றும், "இங்கே போதுங் கொலோ இனவேல் நெடுங்கண் களிப்ப கொங்கார் சோலைக் குடந்தைக் கிடந்த மால் இங்கே போதுங்கொலோ" என்றும் திருமாலின் வரவை எதிர்பார்த்த வண்ணமாய் இருப்பர். அவன் வந்தபோது தன்னுடைய நீசதையை நினைந்து விலகிநின்று, பின்பு தன்னுடைய தோழியிடம், "கைவண்ணம் தாமரை; வாய் கமலம் போலும்; கண்ணிணையும் அரவிந்தம்; அடியும் அஃதே. அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும், தோழி! அவரை நாம் தேவர் என்று அஞ்சினோமே" என்று ஏங்குவர்.

நாலாயிரப் பாடல்கள் இறைவனது தன்மையையும், உயிர்களது தன்மைகளையும் விளங்கக்கூறி, இறைவனுடைய நற்றாளை வணங்குவதே உய்யும் உபாயம் என்று கேட்போர் மனதிலே பசுமரத்தாணிபோலப் பதியச் செய்கின்றன. ஐம்புலன்களாலே அறிய இடலாதவனாயினும் எம்பெருமான் பத்துடையடியவர்க்கு எளியவன் என்று நம்மாழ்வார் அறுதியிடுகிறார். "நா வாயில் உண்டே! நமோ நாராயணா என்று ஓவாது உரைக்கும் உரை உண்டே! ஏன் ஒருவரேனும் தீக்கதிக்கு உள்ளாக வேண்டும்?" என்கிறார் பொய்கையாழ்வார். "என் நெஞ்சம் சிங்கப்பிரான் சேரும் திருக்கோயில் ஆகிவிட்டது" என்று காட்டி, தம்மை நலியவரும் வல்வினை நோய்களை "இங்குப் புகேன்மின்! பங்கப்படாது உய்யப் போமின்'! என்று எச்சரிக்கிறார் பெரியாழ்வார். "ஊன்வாட உண்ணாது உயிர்காவலிட்டு, உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து தவம் செய்யவேண்டியதில்லை, தில்லைநகர் திருச்சித்ர கூடத்தைச் சேர்ந்தாலே போதும்" என்று தவத்தினும் பக்தியே சிறந்தது என்னும் உண்மையை எடுத்துக் கூறுகிறார் திருமங்கை மன்னர்.

பூதத்தாழ்வாரும், "அருள் தானாகவே மழைபோலப் பொழிவது, அதனை யாரும் கட்டுப்படுத்த முடியாது. ஆனாலும், மழைவரும்போது அணைகோல முடியாதாகையால், முன் கூட்டி மனமாகிய காட்டுத்திடரை ஏரியாக அமைத்துக் கொள்ளவேண்டும்" என்று பக்தர்கள் செய்யவேண்டிய காரியம் இது என்று சுட்டிக் காட்டுகிறார்.

எனவே, ராமாயணத்தைப்போல நாடெங்கும் பக்தி வெள்ளங்களாகப் பரவிய இப்பாடல்கள் தமிழ் நாட்டைச் செழிக்கச் செய்ததோடு, தமிழ் நாட்டோடு பிறநாட்டு மக்களுக்கும்

யாருக்குக் கவலை?

கு. நாராயணஸ்வாமி

சுதந்திர தினம். எங்கேயும் சுதந்திரம் என்பதே பேச்சாக இருந்தது. நகரெங்கும் குதூகலம். ஜனங்கள் தங்கள் புத்தாடைகளில் மினிர்ந்து கொண்டு ஆனந்தமாக வெளிக்கிளம்பினர். விளக்குகளினாலும் கொடிகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த கடைகளையும் பெரிய கட்டிடங்களையும் பார்த்து மகிழ்ந்தனர். பணத்தை ஜலமாகச் செலவழித்து ஜோடித்திருந்த வளைவுகளும் தோரணங்களும் அவர்களை எங்கும் வரவேற்றன. இரவைப் பகலாக்க முயன்று, கிடைத்த வெற்றி அவர்கள் கண்களைப் பறித்தது. எங்கும் ஜோதிமயமாக இருந்தது. ஆனால் அந்த ஜனங்களின் கண்ணில் ரஸ்தா ஓரத்தில் கிடந்த ஏழை ஜீவன் தென்படவில்லை. அப்படித் தப்பித்தவறிப் பட்டாலும் அருவருப்புடன் தங்கள் பார்வையை வேறொரு பக்கம் திருப்பிக் கொண்டார்கள்.

எல்லோரும் களிப்படைந்து இருக்கும் சமயத்தில் அந்த ஏழை ஜீவன் சுருண்டு படுத்திருக்கிறது. அது என்ன பாவம் செய்தது? பணமில்லாத காரணம்தான், வேறென்ன? தேசம் அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைவதையா அது ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது? பட்டினியால் ஒடுங்கி எலும்புக்கூடாக விளங்கும் ஓட்டைச் சடலத்திலிருந்து தன் உயிருக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்றல்லவா அதன் கவலை? அதற்கு சுதந்திர தினமும் சாதாரண தினமும் ஒன்றுதான். என்றைக்கும் அதன் குவளையும் வயிறும் காலிதான். இது ஏனோ, இது ஏனோ?

சுபாஷ் சந்திரபோஸ் ரோட்டில் நடைபாதையின் ஓரத்தில் ஒரு பிச்சைக்காரி சுருண்டு படுத்திருந்தாள். அவள் பக்கத்தில் ஒரு சிறு குழந்தை அழுது கொண்டு கிடந்தது. கூட்டத்தையும் இரைச்சலையும் கண்டு அது பயந்து விட்டது. அதையணைத்து அதன் பயத்தைப் போக்கக் கூடிய நிலைமையில் அதன் தாய் இல்லை. அநேக நாட்கள் பட்டினியாக இருந்ததால் அவள் கண்ணைக்கூடத் திறக்கச் சக்தியற்றவளாய்க் கிடந்தாள். சொந்தக் குழந்தை அழுதது கூட அவள் காதில் கேட்டதோ என்னவோ?

அருகில் பஸ்ஸுக்காக அநேகர் நின்றுகொண்டிருந்தனர். தூரத்தில் வரும் பஸ்ஸில் இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற கவலைதான் அவர்களை வாட்டிக்கொண்டு இருந்தது.

'என்ன, பஸ் கிடைக்காது போலேயிருக்கே? ஒரு டாக்ஸி பாருங்களேன். சீக்கிரம் போயிடலாம்' என்று பேசினாள் ஒரு ஸ்திரீ. அவள் அணிந்திருந்த ஆபரணங்கள் வர்ண விளக்குகளில் மின்னின.

"டாக்ஸி ரொம்ப கேட்பானே? திருவல்லிக்கேணிக்கு 10, 15 ரூபாய் கூடக் கேட்பான் இன்னிக்கு. குதிரை வண்டி கிடைக்குமா பார்க்கிறேன்," என்றார் அவள் புருஷர்.

"போனால் போகிறது. ஒருநாளைக்குத் தானே? குழந்தைகள் இப்பவே பசி பசி என்கிறதுகள். குதிரை வண்டியில் போவதற்குள் மயக்கம் போட்டு விழுந்துடும் டாக்ஸியே பாருங்

பேரறிவூட்டி பேரின்பமென்னும் வீட்டிற்கும் வழிகாட்டிகளாயின என்பது தெளிவு.

(அகில இந்திய ரேடியோவில் 31—5—47 ஒலிபரப்பப்பட்டது.)

கள்'' என்றாள். புருஷன் அதை சிரமேற் கொண்டு டாக்ஸியைத் தேடிச்சென்றான்.

“ அம்மா ! ஓரணா இருந்தால் கொடேன். அந்தப் பிச்சைக்காரிக்குப் போட்றேன் ” என்று கேட்டான், அந்த ஸ்திரீயின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த சிறு பிள்ளை.

“ ஆமாம்மா, கொடும்மா ; பாவம், குழந்தை அழறது ” என்று சிபார்சு செய்தாள் அவன் தங்கை.

“ வேறே வேலையில்லை உங்களுக்கு ? காசு சும்மாக் கிடைக்கிறதோ ? பிச்சைக் காரனுக்கெல்லாம் போட இங்கே காசு என்ன கொட்டிக்கிடக்கிறதோ ? சும்மா யிருங்கள். அதோ அப்பா வந்துட்டா டாக்ஸியோடே ” என்றாள் தாய். குழந்தைகள் பரிதாபமாகப் பிச்சைக்காரியைப் பார்த்துக்கொண்டு நின்றன. அவர்கள் பார்வையில் அளவில்லாத இரக்கம் தென்பட்டது.

“ சீதா, இதோ ஆரஞ்சு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். டஜன் 5 ரூபாயாம். வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள். பசிக்குச் சாப்பிடலாம். ” என்று சொல்லிக்கொண்டு வந்தார் புருஷர்.

“ ஒரு ஆரஞ்சுப் பழத்தையாவது கொடும்மா, அந்தப் பிச்சைக்காரிக்குக் கொடுக்கிறேன் ” என்று மறுபடியும் கெஞ்சினான் அந்தச் சிறுவன். அம்மா கொடுக்கமாட்டாள் என்று அவனுக்குத் தெரியும் போலவும், இருந்தாலும் கேட்டு வைக்கலாம் என்று கேட்பது போலவும் தோன்றியது.

“ சும்மா யிரு ” என்று அதட்டல் போட்ட வண்ணம் அவர்களை இழுத்துக்கொண்டு வண்டியில் ஏறினாள் அவள். வண்டியிலிருந்தும் அவர்கள் அந்தக் குழந்தையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். வண்டிகிளம்பி வேகமாகக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு சென்றது.

“ தரித்திரங்கள் ! ரோட்டிலே நடக்க விடாமல் படுத்துக்கொண்டு கிடக்கிறது கள். என்ன வியாதியோ, என்ன இழவோ? தூ!” என்று சொல்லிக்கொண்டே சென்றார் ஒருவர்.

எனக்கும் மனது கஷ்டமாகத்தான் இருந்தது. இருந்தாலும் எங்கே என்னை யறியாமல் காசை எடுத்து ஒரு வேளை போட்டுவிடுவேனோ என்று பயந்து சட்டைப்பையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தேன். அந்தக் குழந்தை என்ன ஆயிற்றோ ! அதை யார் கவனிப்பார் ? அதைப்பற்றி யாருக்குக் கவலை ?

விகடன் பரிமள பாக்குத்தூள்
S. I. A. A.

எக்ஸிபிஷனில் எல்லா பரிமள பாக்குத் தூள்களுக்கும் ‘ விகடன் ’ பரிமள பாக்குத்தூள்தான் இணையற்றது என்று முதல் பரிசு பெற்றது.

50 காலணுப் பொட்டலம் 0·9·0
மாதம் 25-60-100 சம்பளம்
விற்பனையாளர் தேவை. எழுதுக :
மாணிக்க விலாஸ்
11, பீட் :: மதராஸ் - 1

தென்னாற்காடு விற்பனையாளர் :
எம். நஜிமுதீன், கூடலூர் N. T.

மரகதத்தின் துயரம்

திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

1

அவளுடைய மனம் கபடமற்ற தூய்மையான அன்புப் பொக்கிஷம். ஆனால் அவ்வுண்மையை அறிய அசூயை நீங்கி அன்பு நிறைந்த மனப்பான்மை வேணும். இந்தப் பாழுலகிலோ அன்பு குறைவு; அசூயை நிறைவு. அவள் யாது செய்வாள். ஷேக்ஸ்பியர் என்ற மகா கவி கூறுவதுபோல் "அவள் கோயிலில் வைக்கப்பட்ட பொறுமையின் சிலை எப்படித் துயரத்தை நோக்கி சாந்தியாகப் புன்முறுவல் செய்யுமோ அப்படி இருந்தாள்" இந்த நிலை துயரமாகவும் முடியக் கூடும். இன்பமாகவும் முடியக்கூடும். எல்லாம் எனையாளும் ஈசன் செயல். நான் கண்ட அந்த அற்புத சம்பவத்தையே உள்ளது உள்ளபடி நான் கூறுகிறேன்.

மரகதம் நல்ல வம்சத்திற் பிறந்தவள். அவளுடைய தந்தை பெரிய பதவியில் அமர்ந்து உலகம் போற்றும் கல்வியும் குணங்களும் ஒருங்கமைந்து விளங்கிய புண்ணிய புருஷர். அவர் மனம் லக்ஷ்ய உலகிலேயே உலாவிக்கொண்டிருக்கும். பிறர் நன்மைக்காகவே உழைக்கும் இயற்கையுள்ளவர். "தனக்கென வாழா பிறர்க்குரியாளன்." கலைப்பித்தும் கடவுள்பித்தும் தலைக்கு ஏறிப்போனவர். தந்தையைப்போலவே மகளும். எனக்கு இருவரையும் நன்கு தெரியும். மரகதம் எப்பொழுதும் புஸ்தகமும் கையுமாக இருப்பாள். வெகு அழகாக, பிடில் வாசிப்பாள். கலையின்பத்தில் வெகு மோகம். வடமொழி தென்மொழி ராஷ்டிர மொழிகளில் நல்ல தேர்ச்சி. கதை கட்டுரை கவிதைகளில் அளவற்ற ஆர்வம். அன்பு நிர்மாண சக்தி. அவளுடைய தந்தை சுந்தரமய்யர் அவளை தன் கண்ணின் கருமணியைக் காட்டிலும் போற்றிப் பாராட்டி வளர்த்து வந்தார். அவளுடைய இளமைப்பருவத்திலேயே அவளைச் சபேசனுக்கு மணஞ் செய்து கொடுத்தார். இளந்தம்பதிகள் வெகு இன்பமாகக் காலங்கழித்து வந்தார்கள். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக உடைந்த வெண்கலம்போல் அவர்கள் அன்புநிலை இன்னொலி இழந்து பிளவடைந்தது. அதற்குக் காரணம் அவளுடைய தந்தையின் மேன்மையும் குணங்களுமே தான். இதுதான் உலக இயல்பில் காணப்படும் பரமாச்சர்யம். இன்ப நிலைக்கு எது முக்கிய காரணமாக வேணுமோ அதுவே துன்ப நிலைக்கு மூலகாரணமாய் விடுவதை நாம் காண்கிறோமல்லவா?

2

சபேசன் நல்ல குணங்கள் வாய்ந்தவன். ஆனாலும் பணமும் படிப்பும் நிறைந்த நிலையில் தான் இல்லையே என்ற ஏக்கம் இருந்தது. தன் மனைவி எம். ஏ. பட்டம் பெற்றும் தான் பி. ஏ. பட்டத்துடன் நின்றுவிட்டது அவனுக்கு உறுத்திக் கொண்டே இருந்தது. தான் அமர்ந்த வேலையும் பெரிதல்ல. அன்றைய தினம் அவன் ஆபீஸிலிருந்து இரவில் வந்த பொழுது மரகதம் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாள். அன்றைய தினம், தான் சித்திரித்த கதையில் காதலி எப்படி எந்தப் பாட்டுகளால் காதலனை அன்பு வலையில் கட்டுண்டிருக்கச் செய்தாள் என்று வர்ணித்திருந்தாளோ அந்தப் பாட்டுகளை உணர்ச்சி ததும்பப் பாடிக்கொண்டிருந்தாள். ஆனால், அகத்திற்கு வரும்பொழுதே சபேசன் நல்ல பாம்பைப்போல் சீறிக்கொண்டே வந்

தான். அவன் ஆபிசிலிருந்து சோர்ந்து நடந்து வந்துகொண்டிருந்தபொழுது அவனுடைய மாமனார் ஒரு கழகத்தில் சொற்பொழிவு செய்யக் காரில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தார். அவர் அவனைப் பார்க்கவில்லை. அவர் தன்னைக் கண்டும் காணாததுபோல் அலட்சியம் செய்து போய்விட்டார் என்று சபேசனுக்குத் தோன்றியது. வீட்டுக்கதவை ஆத்திரமாகப் படபட என்று தகர்த்தெறிவதுபோல் இடித்தான். மரகதம் கீத இன்பத்தில் மெய்மறந்து பாடிக்கொண்டிருந்தாள். அதிலிருந்து அவனுடைய சினம் அளவு கடந்துபொங்கி வழிந்தது. "மரகதம்!" என்று இடிபோல் கூவிக் கதவை உடைப்பதுபோல் தட்டினான். உடனே ஓட்டமாக ஓடிக் கதவைத் திறந்தாள் மரகதம். உள்ளே காலை வைக்கும் பொழுதே வள்ளென்று விழுந்தான் சபேசன்.

"பாட்டாம் பாட்டு! பணக்கொழுப்பு! பசியால் வாடியிருக்கும் கணவனை மதியாத கலை உலகத்தின் ராணியோ?" என்றான்.

உடனே மரகதத்தின் மனம் சோர்ந்து தளர்ந்து தள்ளாடிக் கீழே விழுந்துவிட்டது.

"ஐயோ! ஒன்றுமில்லையே! உங்களுக்கு மிகவும் பிடித்த பாட்டைத்தான் பாடிக்கொண்டிருந்தேன். இன்னும் ஒரு முறை பாடட்டுமா?" என்றாள்.

"உடல் சோர்ந்து மனமுடைந்து வந்தவனுக்கு அருந்த காப்பியைக் காணோம். சங்கீதமாம் சங்கீதம்! நீ என்ன செய்வாய்? உன் தந்தையின் பணச்செருக்கும் உன்னுடைய அலட்சியமும் என்னால் பொறுக்க முடியவில்லை. உன் தந்தை இன்று என்னைக் கண்டும் காணாமல் இருந்ததுபோல் பாசாங்கு செய்து போய்விட்டார். அந்த வாழையடி வாழைதானே நீ?" என்றான்.

பாவம். மரகதம் என்ன செய்வாள். தன்னுடைய தந்தை அப்படித் தவறாக நடந்திருக்கமாட்டார் என்று அவளுக்குத் தெரியும். ஆனாலும் காட்டுத்தீயைப் போல பற்றி எரியும் சினத்தை அவள் எப்படி அணைக்கமுடியும்! அடுக்களைக்கு மௌனமாகச் சென்று காப்பி போட்டுக்கொண்டு வர யத்தனம் செய்தாள். பாடிக்கொண்டிருந்த இன்பத்தில் வீட்டில் விறகே இல்லை என்ற விஷயத்தை மறந்துவிட்டாள். எப்படிக் கணவனிடத்தில் நேர்முகமாக இதைக் கூற முடியும்? அவனுடைய கோபாக்கினி இன்னும் அளவுகடந்து மூண்டுவிடும் என்ற பயத்தால் கொல்லைப்பக்கமாகவே அவளுடைய தந்தை சுந்தரமையருடைய வீட்டுக்கு ஓடினாள். அவர் அப்பொழுது தான் மகாநாட்டில் சொற்பொழிவாற்றிச் சரிகைமாலையுடன் உள்ளே நுழைந்தார். தன்னுடைய மகள் கண்ணும் கண்ணீருமாக நிற்பதைக் கண்டு பயந்துபோனார். "ஏன் அம்மா இருட்டில் வந்தாய்? ஓடி வந்தாயா? மார்பு இப்படி படபட என்று அடித்துக்கொள்ளுகின்றதே! என்ன பயம்? என்ன தீங்கு?" என்று பரபரப்புடன் கலங்கிய கண்ணுடன் கேட்டார். மரகதம், "அப்பா! அதிருக்கட்டும். நீங்கள் ஏன் இன்று மாப்பிள்ளையைக் கண்டும் காணாததுபோல் சென்றீர்கள்?" என்றாள். அதற்கு அவர் "ஐயோ! நான் அப்படிச் செய்வேனா? மகாநாட்டுக்கு வேகமாகச் சென்றபொழுது என் எண்ணம் நான் செய்யவேண்டிய சொற்பொழிவில் ஈடுபட்டிருந்ததால் கவனிக்காமல் சென்றுவிட்டிருக்கலாம். வா, நாமிருவரும் சென்று உன் கணவனைச் சமாதானம் செய்வோம்" என்றார். பிறகு அவரே காப்பியை ஒரு கூஜாவில் எடுத்துக்கொண்டு மரகதத்துடன் காரிலேறி மாப்பிள்ளை வீட்டுக்கு வந்தார்.

3

இதற்குள் என்ன நேர்ந்தது? மனைவி காப்பி கொண்டு வாராததால் சபேசன் அடுக்களையில் நுழைந்து பார்த்தான். மனைவியைக் காணவில்லை. மனைவி எழுதியிருந்த சிறுகதை அங்கே கிடந்தது. அதைப் படித்தான். அவனுடைய கலை உணர்ச்சியும் தேர்ச்சியும் அவனுடைய சினத்தையே பொங்கி எழச்

செய்தன. "இவள் நம்மை மதிப்பாளா! கலை ராணியோ இல்லையோ?" என்றான். "அப்பாவிடத்தில் ஓடிவிட்டாளாக்கும்!" என்று சீறினான். ஒரு துண்டுக் காகிதத்தில் பின்வருமாறு எழுதினான்: "நான் உனக்குத் தகுந்த கணவன் அல்ல என்று உன் உணர்ச்சி. அது எனக்கு நன்கு தெரியும். நீ இனி என்னைக் காணமாட்டாய். என்னுடைய எந்த அற்ப வேலையை நீ இகழ்கிறாயோ நான் அதை இன்று ராஜிநாமா செய்து கடிதம் எழுதி விட்டேன். நீ உன்னுடைய ஒப்பற்ற தந்தையின் கிரீடத்தில் கோகினூர் வைரமாக விளங்கிக்கொண்டிரு."

அவன் வீட்டினின்றும் வெளியேறி இருளில் மறைந்தான். மரகதமும் அவளுடைய தந்தையும் காப்பிக் கூஜாவுடன் உள்ளே நுழைந்ததும் அந்த இடிபோன்ற சின முழக்கமுள்ள பயங்கரமான அணு குண்டு போன்ற காகிதத் துண்டைக் கண்டார்கள். வெட்டி வீழ்த்தின மரம் போல் மரகதம் சோக மூர்ச்சையாக விழுந்தாள். அவளைத் தேற்றி அவளுடைய தந்தை சபேசனை ஊரெல்லாம் தேடினார். அவனைக் காணமுடியவில்லை. பத்திரிகைகளில் அவன் மன்னித்துத் திரும்பி வரவேணும் என்று விளம்பரங்கள் செய்தார். ஒன்றும் பயன்படவில்லை. மரகதத்தின் துயரம் உச்ச நிலையை அடைந்தது.

4

மரகதத்தின் தந்தை அடுத்த ஆண்டிலேயே துயரந்தாங்காமல் உயிர்நீத்தார். அவருடைய அளவற்ற செல்வம் மரகதத்திற்கே வந்தது. கணவனுடைய அன்பை இழந்து கணவனே மறைந்து போன பிறகு நிகரற்ற செல்வம் இருந்து என்ன பயன்? அதை எல்லாவற்றையும் பள்ளிக்கூடங்கள் வைத்தியசாலைகள் அனுதாலயங்கள் முதலிய நல்ல ஸ்தாபனங்களுக்கு நன்கொடையாக அளித்தாள். தன்னுடைய கணவனுக்குச் சொந்தமான ஒரு ஏகரா நிலத்தில் வந்த வருவாயைக்கொண்டு ஏழையாகத் துயரமே உருவாகக் காலங்கழித்து வந்தாள். எப்பொழுதும் கடவுள் வழிபாட்டிலேயே காலங்கழித்தாள்.

தனக்குவமை யில்லாதான்
　　றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

என்றைக்காவது தன் கவலை ஓயாதா என்று ஈச்வரியை மன்றாடிக் கேட்டுக் கொண்டே இருந்தாள்.

பாராயோ வென்னைமுகம்
　　பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து
　　செப்பாய் பராபரமே.

ஓயாதோ என்கவலை
　　யுள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ வையா
　　பகராய் பராபரமே.

எண்ணாத வெண்ணமெலாம்
　　எண்ணியெண்ணி யேழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப்
　　போதும் பராபரமே

அன்னையிலாச் சேய்போல
　　அலக்கணுற்றேன் கண்ணைக
வென்னகத்திற் றாய்போ
　　லிருக்கும் பராபரமே.

நீராய்க் கசிந்துருகி
　　நெட்டுயிர்த்து நின்றேனைப்
பாராத தென்னே
　　பகராய் பராபரமே.

5

இப்படிக் காலச்சக்கிரம் சுழன்று சுழன்று சென்று வெகு ஆண்டுகள் சென்றன. மரகதம் தன்னுடைய அண்ணன் மகள் கலியாணத்திற்காக மயிலாப்பூருக்குச் சென்றாள். அவ்விடத்தில் ஒருநாள் கற்பகாம்பாள் சன்னிதியில் ஒரு பேரறிஞர் வால்மீகி ராமாயணக் கதை சொன்னார். சீதை அக்கினிப்பிரவேசம் செய்த இடம். வெகு உருக்கமாக அந்தக் கதையைக் கூறினார். அதைக்கேட்ட மரகதம் மெய்மறந்து அலறித் தன்னிலையை நினைந்துருகி மூர்ச்சையாக விழுந்

மதிப்புரை

படிப்பதற்கு

காதம்பரி : மாதப்பத்திரிகை. ஆசிரியர் : அ. கி. ஜெயராமன். வருஷசந்தா ரூ. 6. தனிப்பிரதி அணு 8. காரியாலயம் : திருவல்லிக்கேணி, சென்னை - 5.

பத்திரிகைகள் மலிந்த இந்நாளிலும் சிறந்த பத்திரிகைகளை விரலிட்டு எண்ணிவிடலாம். அப்படி அபூர்வமாகத் தோன்றும் நல்ல பத்திரிகைகளின் வரிசையில் சேர்க்கக்கூடியது காதம்பரி. ஆசிரியர் தமிழ்நாட்டுக்கு நன்கு அறிமுகமானவர். இலக்கிய சேவையில் நீண்ட காலமாக ஈடுபட்டுத் தொண்டாற்றிவரும் அன்னாரின் ஆர்வமும், ஆழ்ந்த அனுபவமும் காதம்பரியின் முதல் இதழிலேயே பிரதிபலிக்கின்றன. ‘ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு முழுநாவல்; அதற்கு ஒவ்வொரு பவுன் சம்மானம்’—இந்தப் புது முறை எழுத்தாளர் உலகிலும் ரசிகர்கள் உலகிலும் பெரிதும் மகிழ்ச்சியை உண்டு பண்ணும் என்பதில் தடையேயில்லை. இந்த நவீன அம்சம் மிகவும் பாராட்டுதற்குரியது என்று சொல்லும் மூச்சிலேயே சற்றுச் சிரம சாத்தியமான முயற்சி என்றும் கூடச்சொல்லத் தோன்றுகிறது. தளராத ஊக்கம்வேண்டும்.

முதல் இதழில் கா. ஸ்ரீ. ஸ்ரீயின் சுவையுள்ள நாவல் வெளிவந்திருக்கிறது. கவி ரவீந்தரரின் அழகான கவிதைக் கதை, தி. ஜனகிராமனின் டட்ரக்கதை, அ. கி. ஜெயராமன், வி. எஸ். வெங்கடேசன். இவர்களின் இனிய சிறுகதைகள், ‘உமாசந்திர’னின் நாடகம், எம். எஸ். ராந்தவாவின் கருத்தமைந்த கட்டுரை, ரா. ஆறுமுகத்தின் தொடர் நாவல் முதலியன இடம் பெற்றுள்ளன. அடுத்த இதழில் ‘புதுமைப் பித்தன்’, கி. வா. ஜகந்நாதன், ப. ஸ்ரீநிவாசன், கு. அழகிரிசாமி, ‘ஆர்வி’ ‘வல்லிக்கண்ணன்’, கொத்தமங்கலம் சுப்பு முதலியவர்கள் எழுதுகிறார்கள். ய. லக்ஷ்மீநாராயணனின் முழுநாவலை எதிர்பார்க்கலாம் என்கிறார் ஆசிரியர். முதலிதழின் முன்னட்டையில் பத்திரிகையின் உன்னதமான பெயரைச் சித்திரிக்கும் முறையில் பாணபட்டருடைய காவியக் கன்னிகை காதம்பரி காட்சி தருகிறாள். தென்படும் அறிகுறிகளிலிருந்து காதம்பரியின் வெற்றிகரமான வருங்காலத்தை ஓரளவு ஊகிக்க முடிகிறது. தமிழ்

தாள். அதைக்கண்ட எளிய பிச்சைக்காரன்போல் வெகு தூரத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவன் ஓடோடி வந்து அவளை உற்றுநோக்கினான். அவன் அவ்வூரிலே பிச்சை யெடுத்துப் பிழைத்து வந்தான். அவன் சபேசனே தான். தான் செய்தது தவறு என்றுணர்ந்தும் மூர்க்கப்பிடிவாதமாக , இருந்துவிட்டான். தூய்மையும் ஏழ்மையும் நிறைந்த மனைவியின் நிலையைக் கண்ட உடன் அவன் மனம் இரங்கி மாறிற்று. இராமர் சீதையை அக்கினிப்பிரவேசம் செய்வித்த கதை அவனுடைய மனதைப் புண்படுத்திப் பண்படுத்திற்று. மரகதமும் கண்களைத் திறந்து இளைத்து உருமாறி இருந்த கணவனைக் கண்டு கலங்கிக் கண்ணீர்விட்டு இமை கொட்டாத கண்களுடைய பார்வைகள் என்ற பூமாலையை அவனுக்குச் சூட்டினாள். துஷ்யந்தன் தான் பெருந்தீங்கிழைத்த சகுந்தலையிடம் மன்னிப்புக் கேட்டதுபோல் சபேசன் மரகதத்திடம் மன்றாடி மன்னிப்புக் கேட்டான். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ ? மரகதத்தின் துயரம் கதிரவன் கிரணங்களைக் கண்ட இருட்டைப்போல மறைந்தது.

நாட்டின் கனவில் உதித்துள்ள லட்சியப் பத்திரிகையான காதம்பரிக்கு அமோக மான ஆதரவு கிடைக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

காலச்சக்கரம் : வாரப்பத்திரிகை. ஆசிரியர்கள் : ம. ப. பெரியசாமித் தூரன், கே. எஸ். பெரியசாமி. வருஷ சந்தா ரூ. 12. தனிப்பிரதி அணு 4. காரியாலயம் : கோவை.

இரண்டொரு சிறுகதைகள், சினிமா, நாடக, ரேடியோ விமர்சனங்கள், ஹாஸ்யத் துணுக்குகள்—அதிகம் சொன்னால் நைந்துபோன விஷயங்களைப் பற்றின தலையங்கங்கள்—இவைதான் பத்திரிகையின் லட்சணம், இதற்குத்தான் ஆதரவு-என்கிற கொள்கையைத் தகர்த்து வாசகர்களுக்கு மிக மிக அவசியமான செய்திகளைத் தொகுத்துத் தருவது காலச்சக்கரம். ஆணித்தரமான அரசியல் அபிப்பிராயங்களும், உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளும், மற்றும் பல புதிய அம்சங்களும் பத்திரிகையில் காணக் கிடைக்கின்றன. பொழுது போக்குச் சாதனமாக உள்ள இன்றையப் பத்திரிகை உலகில் காலச்சக்கரம் போன்ற அறிவூட்டும் பத்திரிகைகள் மிக மிக அவசியமே யாகும்.

தேச சேவை : மாதவெளியீடு. ஆசிரியர்கள் : பிட்சு சுவாமிகள், நா. ராஜகோபால். வருஷசந்தா ரூ. 3. தனிப் பிரதி அணு 4. காரியாலயம் : கோவை.

தூய்மையான தொண்டு ஒன்றையே இலட்சியமாகக் கொண்ட தேச சேவை பெயருக்கேற்ப அரசியல், வைத்தியம், இலக்கியம் முதலிய துறைகளில் தேசத்திற்குப் பணியாற்றி வருவது போற்றத்தக்கது. ஒரே வகையால் கவரப்பட்ட பொதுஜனங்களின் உள்ளம் தேசசேவை போன்ற பத்திரிகைகளை ஆரம்பத்திலே அவ்வளவாக ரசிக்காவிட்டாலும் நாளடைவில் அதன் மேன்மையை கண்டிப்பாய் உணர்ந்தே தீரும். நாட்டிற்கு இன்றியமையாத பத்திரிகைகளின் வரிசையில் தேச சேவையும் ஒன்றாகும்.

திரை உலகம் : தமிழ்சினிமா மாதப் பத்திரிகை. ஆசிரியர்கள்: டி.கே. கோவிந்தன், டி. எஸ். ரங்கநாயகி. வருடசந்தா ரூ. 3. காரியாலயம்: திருச்சினாப்பள்ளி.

சினிமா உலகிலும், பத்திரிகை உலகிலும் தேர்ந்த அனுபவம் உள்ளவர் ஆசிரியர் கோவிந்தன். அன்னார் அளித்துள்ள திரை உலகம் விசேஷ மலர் (மார்ச்) எல்லா அம்சங்களிலும் விசேஷமாகவே அமைந்திருக்கிறது பாராட்டத்தக்கது.

ஹிதபாஷிணி (ஸம்ஸ்கிருதக் கலைகளைப் பரவச்செய்யும் ஒரு தமிழ் மாதப் பத்திரிகை): வருட சந்தா ரூ. 3. தனிப் பிரதி அணு 5. ஆசிரியர் ஆர். முத்து கிருஷ்ண சாஸ்திரிகள். காரியாலயம் : மேலவீதி, தஞ்சை.